

சர்வஜித்து ௵

தை ௴

BHARATA MANI

Editor

K.S.VENKATARAMANI

4

அணா

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நெம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வர்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள், எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

✲

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

மாத வெளியீடு

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்: 34, அலர்மேல்மங்காபுரம், மயிலாப்பூர், சென்னை, 4.

வருட சந்தா ரூபா 3 — தனிப் பிரதி அணா 4

மாலை 19 ‖ சர்வஜித்து ௵ தை ௴ : **JANUARY 1948** ‖ முத்து 1

பொருளடக்கம்

விஷயம்		பக்கம்
போகிற போக்கில்—கா. சி. வேங்கடரமணி	...	2
உலகப் பிரதட்சிணம்—நெல்லை நேசன்	...	5
ஸம்ஸ்கிருதப் பயிற்சி—வே. நாராயணன்	...	9
நான் மாலுமியாக வேண்டும்—பெ. நா. அப்புஸ்வாமி	...	12
கூட்டுறவும் நாட்டுயர்வும்—கே. இராமமூர்த்தி	...	15
நமது குடியரசு—'தராசு'	...	21
நிலம் சிரித்தும் நிறைவளம்	...	25
தந்தையும் மகனும்—கு. நாராயணஸ்வாமி	...	29
ஜகன்மோகினி—எல். ராஜலட்சுமி	...	33
நிழல் விளையாட்டு—'யமுனாபுத்திரன்'	...	38
புத்தக உலகம்	.	40

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

போகிற போக்கில்

கிறிஸ்தவர்களுக்கு ஜனவரி மீ முதல் தேதி புது வருஷப் பிறப்பு. இந்துக்களுக்கு ஜனவரி மீ பதிமூன்றும் தேதியே ஒரு வழியில் - பொருளைப் பெருக்கி லட்சுமியைக் கொண்டாடும் வழியில் - மேன்மையான புது வருஷப் பிறப்பு. சர்க்கரைப் பொங்கலும், முந்திரிப்பருப்பும், கரும்பும். இதைத்தான் சங்கராந்தி புண்ணிய காலமாகக் கொண்டாடுகிறோம். இதன் விசேஷம் என்னவென்றால் தக்ஷிணாயனத்தில் தெற்கு நோக்கி தினசரி தள்ளித்தள்ளி ஓடிக்கொண்டிருக்கும் சூரிய பகவான் நம்மை ஏய்த்துக்கொண்டே தென் துருவம் சென்று பனிக்கட்டியிலும், மலையிலும் போய் உறங்காமல் எள்ளளவு கிருபை நம்மீது வைத்து வடக்கு நோக்கித் திரும்ப ஆரம்பிக்கிறார். இந்தப் பாக்கிய தினம் நாம் கொண்டாட வேண்டிய புண்ணியதினம் அல்லவா? தெற்கேயே சூரிய பகவான் நம்முடைய தலைவர்போல் கண்ணை மூடிக்கொண்டு போய்க்கொண்டிருந்தால், பூமத்திய ரேகைக்கு வடக்கேயுள்ள பிரதேசங்கள் தாங்கமுடியாத குளிரில் அகப்பட்டு உறைந்து அவஸ்தைப்படும் அல்லவா? ஜீவராசியே நசித்துப் போய்விடுமே!

ஆனால் உலக யுத்தம் II க்குப்பின் தற்காலம் எல்லாத் தேசங்களும் அன்ன வஸ்திரத்திற்குப் படும் கஷ்டத்தைப் பார்க்க, வகுப்புவாத கோரங்களைக்காண, முக்கியமாய் இந்தியாவின் கதியை நோக்க, தயவுசெய்து சூரிய பகவான் தெற்கேயே போய்க்கொண்டிருந்தாலே அதுவே கருணையாக இருக்குமென்று சில சமயம் எனக்குத் தோன்றுகிறது. இது போகட்டும். ஆகவேண்டிய காரியத்தை வளர்த்தாமல் பார்ப்போம். சங்கராந்திக்குக் கிடைக்கும் சர்க்கரைப் பொங்கலையும் கரும்பையும் ஏன் வீணாக விட்டுவிடவேண்டும்?

* * * *

புது வருஷம் பிறந்துவிட்டது. தேசப் பிளவினால் ஏற்பட்ட கலகங்களும், சிக்கல்களும், வலுத்துக்கொண்டே வருகின்றன. இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் ஒற்றுமையம்சங்கள் குறைந்து வேற்றுமைகள் அதிகரித்து வருகின்றன. நமது வாழ்வில் அரசியல் துறையைத் தவிரப் பாக்கித் துறைகளெல்லாம் இந்தக் காட்டு வெள்ளத்தில் அழிந்து போய்விட்டன. பழங்காலப் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் உடைந்து போய்விட்டன. இலக்கியத்திலும், கலைகளிலும் - அதாவது தேனில் சப்புக்கொட்டி ருசித்த ரசிகர்கள் இட்டலி சாம்பார் வரட்டு மிளகாய்ப்பொடி அகப்பட்டால் அதைக் காரசாரமாய்ச் சாப்பிட்டால் போதும் என்ற எண்ணத்துடன் சாப்பிட்டு, நம்வாழ்வு கேவலம் மிருகப் பிராயமாகி வருகிறது. இதரத் துறைகளைப் புனருத்தாரணம் செய்வதற்கு ஒரே ஒருவழிதான் இருக்கிறது. அரசியல் துறையை நேர் செய்து அதில் எவ்வளவு சட்டதிட்டங்களுடன் நாம் பாடுபடவேண்டுமோ அவ்வளவும் பாடுபடவேண்டும். வேலி கட்டிய பிறகு தானே பழத்தோட்டம் போட முடியும்!

ஆகையால் பொருளாதாரக் கலைத் துறைகளில் முக்கியமாய்ப் பாடுபடவேண்டும் என்று எண்ணம்கொண்டு, சென்ற ஒன்பது வருஷமாய்ப் பாடுபட்ட

பாரதமணி, தன் எட்டிவைத்த கால்களைக் கொஞ்சம் அடக்கிக்கொண்டு தற்காலம் முக்கியமாய் அரசியல் முன்னேற்றத் திட்டங்களிலேயே பாடுபடும். பிளவுபட்ட இந்தியாவுக்கு அரசியல் பிரச்னைகள் பல; சிக்கல்கள் பல. இந்த அரசியலையே கண்ணுக்கொண்ட நோக்கத்தை இந்தத் தை மாத இதழிலேயே புகுத்த, பலவித வசதிக்குறைவால் முடியவில்லை. ஆனால் அடுத்த மாதம் முதல் விஷயம்தெரிந்த அன்பர்களின் கட்டுரைகள் மூலம் உலகப்போக்கையும், அந்தப் போக்கில் இந்தியாவுக்குச் சம்பவிக்கக்கூடிய கஷ்ட நிஷ்டூரங்களையும் தெளிவாய் எடுத்துக்காட்டும் பாரதமணி ஓர் உண்மை வழிகாட்டியாய் ஆகவேண்டுமென்று ஈசனைப் பிரார்த்திக்கிறேன்.

* * * *

இந்த அரசியல் ராட்டினத்தை மூன்று விதமாக மாதா மாதம் வகுக்கலாம் என்று நினைக்கிறேன். (1) அன்னிய அரசியல் - உலக ஓட்டம். (2) இந்திய அரசியல். (3) மாகாண அரசியல். அன்னிய நாடுகளின் அரசியல் சுழிகளையும் நீரோட்டங்களையும் அளந்து நிர்ணயம் செய்ய முயல்வேன். முக்கியமாய் நமது இந்தியா கவனிக்கவேண்டிய தேசங்கள் மூன்றே. ராஜ்ய தந்திரத்திலும் சூழ்ச்சியிலும் பழம் தின்று கொட்டை போட்ட ஆங்கில தேசம். பிறகு, அமெரிக்க ஐக்கிய நாடுகள். இந்தத் தேசம் ஈசனருளால் லட்சுமி கடாட்சம் பொழிய யாருக்கு எதைக் கொடுக்கிறதென்று தெரியாமல் தவிக்கிறது. வலது கையில் வாழைப்பழமும் இடதுகையில் துப்பாக்கியுமாகக் காட்சி தருகிறது. அமெரிக்காவைத் தக்க வழியில் கையாண்டால் தான் பல காரியங்களில் நாம் முன்னேற்றம் அடையலாம். விவசாயத்திற்கும், கைத்தொழில் சிறப்புக்கும், நானாவித யுத்தத் தளவாடங்கள் செய்யத் தெரிந்துகொள்வதற்கும் அவர்கள் உதவி முக்கியமானது. மூன்றாவது ரஷ்யா தேசம். அது ஒரு பெரிய காடி. மலைப் பாறைகளில் பாடுபட்டுச் சேகரித்து வைத்திருக்கும் தேனடையை இப்பொழுதாவது கொஞ்சம் கலைத்துச் சுவைத்துப் பார்க்கலாமா என்று எண்ணுகிறது. தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலிருக்க முடியுமா? ருஷ்யாவின் மனம் இன்னும் தெளிவடையவில்லை. பதவி மோஹத்தில் ஈடுபட்ட காடி, காடிதானே? சுபாவம் மாறுமா? தவிர, காடியைப் பால் கறக்க நமக்குத் தெரியாது. பசுமாட்டையே கறக்கத் தெரியாதே! காடி கறக்கும் வித்தை ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸுக்குத்தான் தெரியும். நமது பிராசீன தர்மத்திற்கும், நமது நாகரிகப் பண்புக்கும், நமது, உன்னதமான பக்தி - மார்க்மாய் ஈசன் அருளைத்தேடும் அவாவுக்கும் இந்தக் காடிக்குட்டியின் சேர்க்கையும் நட்பும் நமக்கு ஒத்துக்கொள்ளாது. ஆனால் ரஷ்யா உண்மையான ஆத்மார்த்த வழியில் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய உதவியை நாம் எப்போதும் செய்யத் தயாராயிருக்கிறோமென்பதைத் தெரியப் படுத்தவேண்டும். பாமீர் மலைப் பிரதேசத்தாலும், இமயமலையாலும் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் போக்குவரத்து வசதி எப்போதும் மிகக் குறைவாய்த்தான் இருக்கும். யுத்த காலத்திலோ கேட்க வேண்டியதில்லை. இன்னும் மிகவும் குறையும்.

ஆஸ்திரேலியாவின் நட்பை நாம் எந்த வழியிலும் தேடவேண்டியது அவசியம். எல்லாத் தேசங்களையும்விட ஆஸ்திரேலியா என் உள்ளன்பைக் கவர்ந்துவிட்டது. பழைய நாளில் இந்தியா தன் நாகரிகப் பண்பாடுகளின் ஸாம்ராஜ்யத்தைப் பரப்பிக்கொண்டபோது, அந்த மகா இந்தியாவின் (Greaser India) தெற்கு எல்லையில் சேர்ந்ததாக ஆஸ்திரேலியாவையும், டாஸ்மேனியாவையும், நியூஸிலிண்டையும் நான் கருதுகிறேன். ஆதியில் மெக்ஸிகோவுக்கு நாகரிகப் படையெடுத்து (Cultural Conquest) நாம் சென்றபொழுது ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா வழியாகத்தான் சென்றிருக்கவேண்டும். ஆஸ்திரேலியா பெரிய ஸாம்ராஜ்யமாக விளங்கக்கூடிய ஒரு கண்டம். ஒரு

புதிய நாகரிகத்தையும், பண்பாட்டையும் (A New Synthehesis of Culture) அமைக்க ஒரு வசதியான விஞ்ஞான சாலை (Laboratory) எந்த வழியிலும் நாம் ஆஸ்திரேலியாவின் நட்பை அடையவேண்டியது அவசியம். ஆஸ்திரேலியாவின் உதவியைக் கொண்டு நமது இந்தியா பலவிதத்திலும் முன்னேற்றமடைந்து பிரிட்டனிடமும் அமெரிக்காவிடமும் தற்போது ஆஸ்திரேலியா தேடும் அபயத்தை நிச்சயமாக அளிக்கலாம்.

இந்த நெருக்கடியில் நமது வெளிநாட்டுக் கொள்கையை நாம் சீர்திருத்தம் செய்துகொண்டால் இந்தியாவுக்குப் பல விதத்திலும் மேன்மை பிறக்கும் ; புகழ் பெருகும் ; வலிமை அதிகரிக்கும். இதில் தவறு ஏற்பட்டால், நாம் இந்தியாவில் எவ்வளவு பாடுபட்டாலும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்.

இந்தக் குறிப்பிட்ட வேலையை வெற்றியுடன் பார்க்கக் கூடியவர்கள் நமது நாட்டில் மூன்றே மூன்று தேசபக்தர்கள்தான். ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயருக்கு உத்தரவளித்து அமெரிக்காவுடன் உறவுகொண்டாடி அதன் நட்பை எவ்விதத்திலும் பெறும்படி இந்தியாவின் தூதராக அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அனுப்பவேண்டும். அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் வரப்போகும் பெரிய சண்டையை விலக்கும் பொருட்டே இந்தியாவின் உபநிஷதம், வேதாந்தம், சரித்திரம், நாகரிகப் பண்பு இவைகளைச் சொல்லி ரஷ்யாவின் மனதைத் திருப்பும் பொருட்டே நாம் நமது ராஜாஜியை ரஷ்யாவுக்குத் தூதராக உடனே அனுப்பவேண்டும். அவருடைய கூர்மையான புத்திக்கும், சுறுசுறுப்பான சுபாவத்திற்கும் மேற்கு வங்காளக் கவர்னர் பதவி போதுமா? அவர் தினசரி வெளியிடும் அறிக்கைகளிலிருந்தே தனக்குப் பொருந்திய வேலை அது அல்லவென்று நான் தீர்மானம் செய்கிறேன். ராஜாஜியை ரஷ்யாவுக்கு அனுப்பினல் இந்தியாவுக்குப் பல துறைகளில் வெற்றி.

ஆஸ்திரேலியாவுக்கு ஸர் எஸ். ராதாகிருஷ்ணனை நாம் பொறுக்கியனுப்ப வேண்டும். அரசியல் துறையில் அவர மூலம் நாம் பெறக்கூடிய லாபம் ஏராளமாக இருக்கிறது. இவருக்கு நாம் ஒரு பெரிய ஸ்தானத்தைக் கொடுத்துப் பயனடைய வேண்டும். தற்காலம் இவரை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்ப வேண்டியது அவசியம்.

* * * *

இந்தியாவின் அரசியல் விவரங்களைப் பற்றியும் மாகாண நிர்மாணங்களைப் பற்றியும் அடுத்த மாதம் விவரமாய் எழுதுகிறேன். அரசியலில் பாரதமணி ஒரு கட்சியின் சார்பிலோ, வகுப்பின் சார்பிலோ கட்டுப்பட்டுப் பண்ணையாள் போல் நிற்காது. தைரியலட்சுமியைக் கைவிடாமல் சத்தியத்தையும் நியாயத்தையும் தர்மத்தையும் மும்மூர்த்திகளாய்க் கருதி நிஷ்காமியத் தொண்டாற்ற முயலும். ஒருவருக்கும் மனக் கசப்பு வேண்டாம். தவிர அரசியலில் பாரதமணியின் முக்கிய லட்சியம் துண்டுபட்ட இந்தியாவை மறுபடியும் சமரஸ வழியிலேயே ஒன்றுபடுத்த வேண்டியது தான். இதன்றி உழைக்கும் உழைப்பெல்லாம் வீண் உழைப்பாகவே முடியுமென்பது என் தேர்ந்த கருத்து. வாய்க்கால் வெட்டாமல் கேணியிலிருந்தோ, ஆற்றிலிருந்தோ வயலுக்கு நீர்பாய்ச்சுவதுபோல் ஆகிவிடும். சமரஸ வழியிலும், நியாய வழியிலும், தர்ம வழியிலும் இந்தியாவை நாம் வலுப்படுத்திக் கொண்டே வந்தால், நாளடைவில் பாக்கிஸ்தானும் இந்துஸ்தானும் தாமாகவே மீண்டும் ஒன்றுபடும். இந்தப் புனர் - ஐக்கியம் (Re-Union) ஏற்படாத வரையில் இந்தியாவின் அரசியல் பிரசினைகளோ, பாக்கிஸ்தானின் அரசியல் பிரசினைகளோ, வேறு எவ்விதப் பிரசினைகளோ லகுவில் தீரமாட்டா என்பது என் அபிப்பிராயம்.

மயிலாப்பூர்
21-1-48

மணி

உலகப் பிரதட்சிணம்

நெல்லைநேசன்

இருவேறு உலகம்

'யார் முதல் முதல் உலகை ஒரு பிரதட்சிணம் செய்து வருகிறார்களோ அக்கப் பிள்ளைக்கு இந்த மாம்பழம்!' என்று சிவபெருமான் பிள்ளைகளாகிய பிள்ளையாரையும் முருகனையும் நோக்கிச் சொன்னார் என்ற புராணக் கதையைப் பலரும் அறிவர். அப்போது அம்மையாகிய உமாதேவியும் ஐயனுடன் இருந்தாளாம். 'அப்பாவும் அம்மாவும் சேர்ந்து தொந்திப் பிள்ளையாகிய அண்ணனைப் பரிகசிக்கத்தான் இப்படிச் சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்' என்று உள்ளுக்குள்ளே சிரித்துக்கொண்டாராம் முருகக் கடவுள் வெண்முத்துப்போன்ற பற்கள் சிறிது வெளிப்பட. உடனே நீலமும் பச்சையுமாக ஜொலித்துக் கொண்டிருந்த மயில் உலகமெலாம் வானவில் வீசிப் பிரதட்சிணம் செய்துவிட்டுத் திரும்பி வந்துவிட்டதாம். 'தமையனார் தம் மூஞ்சூறு வாகனத்தில் வெள்ளியங்கிரியிலிருந்து இறங்கிக்கூடப் போயிருக்கமாட்டார்; அவராவது உலகப் பிரதட்சிணமாவது! அந்த "நோபெல் பரிசா"கிய மாம்பழம் நமக்குத்தான்' என்று நாக்கிலே நீரூற வந்து இறங்கிய நீலமயில் வாகனருக்கு ஒரே மனக்கசப்பும் ஆசை முறிவுமாய் இருந்திருக்கவேண்டும். யானைமுகக் கடவுள் தும்பிக்கையால் அந்த மாம்பழத்தைத் தம் வாய்க்குள் திணித்துக்கொண்டிருந்ததைப் பார்த்ததும்!

பிள்ளையாருக்குக் கிடைத்த வெற்றியின் மர்மம் உடனே இப்போது விளங்கிவிட்டதாம், 'ஞானபண்டிதசாமி' என்று போற்றப்பெறும் முருகனுக்கு. பிள்ளையார் உமையம்மையோடு அப்பனையும் சேர்த்து ஒரு பிரதட்சிணம் செய்துவிட்டார். அந்த அம்மையப்பருக்குள் அடங்கிபிராத உலகமும் உண்டோ?

நான் தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்டு உலகப் பிரதட்சிணம் செய்து உலகப் பெரு நிகழ்ச்சிகளை ஒருவாறு அறிந்து வரலாமோ என்று எண்ணியதும், மேலே சொன்ன கதை நினைவிற்கு வந்தது. பத்திரிகை ஆபீஸைப் பிரதட்சிணம் செய்து விட்டாலே உலகப் பிரதட்சிணம் ஆகிவிடாதா? அவ்வளவு தூரம் தான் போவானேன்!? கையில் ஒரு கோப்பைச் சூடான காப்பியுடன் பத்திரிகையைச் சுற்றிச் சுற்றிப் பார்வையை ஓட்டினால் போதுமே; உலகம் ஓடி வந்துவிடாதா? 'மயிலும் வேண்டாம், மூஞ்சூறும் வேண்டாம், இருந்த இடத்தில் அப்படியே ஆடாமல் அசையாமல் இருக்கும் என் மயிலாசனமாகிய நாற்காலியே போதும்!'

சாய்வு நாற்காலி வாகனத்திலேயே உலகம் காட்சி கொடுத்தது. கல்லோர் காணவிரும்பும் ஓர் உலகமல்ல, 'இருவேறு உலகம்' தோன்றியது. அமெரிக்காவும் அமெரிக்காவைச் சார்ந்த ஜனநாயக நாடுகளும் ஓர் உலகம் போலவும், ரஷ்யாவும் ரஷ்யாவைச் சார்ந்த பொதுவுடைமை நாடுகளும் வேறொரு உலகமாகவும் காட்சியளித்தன. இரண்டு உலகங்களும் ஒன்றையொன்று முறைத்துப் பார்த்தன; ஏசிக்கொண்டன.

'ஜனநாயகமா நீ? பணநாயகம் அல்லவா? உன்னுடைய டாலர் - ஏகாதிபத்தியத்தை உலகமெங்கும் பரப்பப் பார்க்கிறாய்; இனி உன்னுடைய அணுகுண்டுப் பூச்சாண்டி பலிக்காது!' என்கிறது ரஷ்யா அமெரிக்காவை நோக்கி. அதற்கு அமெரிக்கா ரஷ்யாவின் செம்முகம் பார்த்து, 'அடே பொதுவுடைமைப் பூச்சாண்டியே! நீ ஒரு புதிய சர்வாதிகார ஏகாதிபத்தியத்தை உருவாக்கி வருகிறாய்! ஐரோப்பாவிலுள்ள

பிற நாடுகளைப் பயமுறுத்தி வருகிறாய்! உனக்குத்தான் என்ன சுதந்திரம் இருக்கிறது; சுதந்தரத்திலிருந்து சுதந்திரம் பெற்று விட்டாய்!' என்று பரிகசிக்கிறது.

பிரிட்டன் அமெரிக்காவின் கட்சியை ஆதரிக்கிறது. ரஷ்யாவிலும் அதைச் சார்ந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் விவாதச் சுதந்திரம் பறிமுதலாகி விட்டதென்றும், ஒரே அபிப்பிராயம்தான் வெளியிடப்படலாமென்றும் பிரிட்டனின் பிரதம மந்திரி மிஸ்டர் ஆட்லி கிறிஸ்மஸை ஒட்டி அனுப்பிய அரசியல் ஒலிபரப்பு ஒன்றில் குறிப்பிடுகிறார்.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஸோஷலிஸ்ட் கட்சியினரும், லிபரல் கட்சியினரும், 'பொதுவுடைமைக் கட்சி மற்ற அபிப்பிராயங்களை அடக்கி ஒடுக்கி விடுகிறது' என்றே அபிப்பிராயப் படுகிறார்கள். 'மன்னன் சொல்லுக்கு மறுசொல் ஏது?' என்று பழைய மன்னர்களும் சக்கிரவர்த்திகளும் நினைத்து ஜனங்களை அடக்கி ஆண்டார்கள் அல்லவா? அவர்களைக் காட்டிலும் மோசமான முறையில் பொதுவுடைமைக் கட்சி பொது மக்களின் பெயராலேயே அவர்களை அடக்கி ஆளுகிறது! என்கிறார் மிஸ்டர் ஆட்லி.

பொது மக்களுடைய உள்ளத்திலிருந்தும் உடலிலிருந்தும் அடிமைத் தளையைக் களைந்து எறிய முளைத்தெழுந்த ஒரு பெரு முயற்சிதானே பொது உடைமை—அது இன்று பொதுமக்களை அடக்கிச் சுதந்திரத்தையும் நசுக்கி வருகிறது என்றால் அதை நம்புவது கஷ்டமான காரியம்தான். உண்மையில் ரஷ்யா தன் தற்கால ஆட்சிமுறையில் இன்புற்றிருக்கிறதா? இதை உள்ளபடி அறிந்து கொள்வதுகூடக் கஷ்டம்தான்.

ஒரு பொதுவுடைமை வாதியை நோக்கி வேறொருவன், 'நீ சௌக்கியம் தானா?' என்று கேட்டானாம். அதற்கு அவன், 'அப்படித்தானிருக்கவேணும்; எங்கள் மாஸ்கோ ரேடியோ அப்படித் தான் சொல்லுகிறது!' என்று பதில் சொன்னானாம். 'இதுதான் சர்வாதிகார ஆட்சிமுறை?' என்று விகடம் செய்திருக்கிறார் ஜனநாயகவாதி ஒருவர்.

பொதுவுடைமை வாதியோ உலக சுபிட்சத்தைக் குறித்துப் பேசும் அமெரிக்க ஜனநாயகத்தைக் குறித்து, 'அமெரிக்கா கொள்ளை லாபம் அடித்துக் கொழுப்பதுதான் உலகச் சுபிட்சம்! அமெரிக்க முதலாளி வர்க்கம் உலக அரசுகளையெல்லாம் தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கப் பார்க்கிறது!' என்கிறான். 'அமெரிக்கா கபந்தனைப்போல் கண்டதையெல்லாம் விழுங்கி உலகத்தையெல்லாம் குசேலனாக்கித் தான் மட்டும் குபேரனாகவே நிலைபெறப் பார்க்கிறது!' என்றார் ஓர் இந்தியப் பொதுவுடைமைவாதி—அதாவது மாஸ்கோவையே தன் புதிய மதத்தின் காசியாகவோ, மெக்காவாகவோ நினைத்துக் கொண்டிருப்பவர். மதங்களிலும் புராணங்களிலும் இவருக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் இந்தப் புராண பாஷைதான் டாலர் ஏகாதிபத்தியத்தின் பயங்கர சொரூபத்தை உள்ளபடி இந்தியர்களுக்குக் காட்டக்கூடுமென்று நினைக்கிறார்.

பிரசித்தி பெற்ற ஸோவியத் பொருளாதார சாஸ்திரியான திரு. ஏ. லியாண்டைன் (A. Leontyne) என்பவர் தமது சிறு நூல் ஒன்றில் (இது பம்பாயிலும் வெளியிடப் பட்டிருக்கிறது) அமெரிக்க டாலர்-ஏகாதிபத்தியத்தைப் பரிகசிக்கும்போது, இதை ஒரு பெருந்தீனிக்காரனோடு ஒப்பிடுகிறார். ஆனால் இந்தப் பகாசுரன் தன்னால் ஜீரணிக்க முடியாத, விழுங்கவும் முடியாத அளவிற்கு விழுங்க முயல்கிறான் என்றும், இம்முயற்சியில் மூச்சுத் திணறிப் போவான் என்றும் சொல்கிறார். இல்லாவிட்டால், ரஷ்ய பீமன்தான் இருக்கிறானே!—என்பது குறிப்பு.

இப்படி ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு பயங்கர விபரீத நிலைமை ஏற்பட்டு ஒன்றையொன்று பரிகசிக்கவும், வெறுக்கவும், பயமுறுத்தவும் தூண்டுகிறது. இந்தப் பரஸ்பரபயம் மற்ற நாடுகளையும் பயமுறுத்துகிறது. இரண்டு அரக்கர்கள் ஒருவருக்கு ஒருவர்

எதிரே நின்று அட்டகாசம் செய்வது போலவும், ஆர்ப்பாட்டமாக ஒருவரை யொருவர் அதட்டுவது போலவும், குறி பார்த்து வீசவேண்டுமென்று ஆயுதங்களைத் திட்டிக் கூர்பார்ப்பது போலவும் தோன்றுகிறது.

பொங்கிப் பெருகிப் பரந்து வரும் பொதுவுடைமை வெள்ளம் உலகச் சமாதானத்தை அடித்துக் கொண்டு போய் விடும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது. ஆகவே இந்த வெள்ளத்தை டாலர் அணைபோட்டுத் தடுக்க வேண்டுமென்று கருதுகிறது. மேற்கு ஐரோப்பாவையும் கிழக்கே கொரியாவையும், மத்தியதரைக் கடல் பிரதேசத்தையும் பொதுவுடைமைப் பிரளயத்திலிருந்து காக்க விரும்புகிறது. கிரீஸ் துருக்கி வாயிலாக ஸோவியத்துகள் மத்தியதரைக் கடலுக்கு வந்து விடாதபடி அமெரிக்கா முயற்சி செய்வதால்தான் கிரீசும் துருக்கியும் இன்றைய உலகில் அதிமுக்கியமான பிரதேசங்களாகிவிட்டன.

ஸோவியத்தின் செல்வாக்கு ஏற்படாதபடி அமெரிக்கா தன் செல்வத்தைக் கொண்டு பிறநாடுகளுக்கு உதவி செய்து வருகிறது. இதைத்தான் 'மார்ஷல் திட்டம்' என்கிறார்கள். இத்திட்டத்தின் அரசியல் நோக்கம் பொதுவுடைமைக்கு அணைபோடுவதுதான். இந்த அரசியல் நோக்கத்திற்கு இசையாததால், யூகோஸ்லேவியா, செக்கோஸ்லேவேகியா, அல்பேனியா, போலண்ட் ஆகிய சிறு ஐரோப்பிய நாடுகள் யுத்தப் பிற்கால நிலையில் தங்களுக்குப் பொருளுதவி தேவையாக இருந்தும் அமெரிக்க உதவியை மறுத்து விட்டன. பொதுவுடைமைக்கு அணை போடுவதற்காக ஜெர்மனியையும் இப்போது சிதறிப் பிளவுபட்டுக் கிடக்கும் நிலையிலிருந்து ஒன்றுபடச் செய்ய வேண்டுமென்று அமெரிக்கா ஆலோசிக்கிறது.

ஐரோப்பாவில் பொதுவுடைமைக்கு அணை போடுவதுபோல் ஆசியாவிலும் அணைபோடுவது அவசியம் என்று கருதும் அமெரிக்கா, பொதுவுடைமைக்காரருடன் இன்று போராடிக் கொண்டிருக்கும் சீனாவிலும், சமீபத்தில் ஜப்பானின் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்ட கொரியாவிலும் தன் பார்வையைச் செலுத்தி வருகிறது. கொரியா சுதந்திர நாடானதும் பொதுவுடைமை நாடாகி விடலாகாது என்ற பயம் அமெரிக்காவுக்கு உண்டு.

ஸோவியத் அரசோ, தன்னைச் சுற்றி ஓர் உருக்கு மதிலை அமெரிக்கா அமைத்துத் தன் கொள்கையைப் பரவவிடாமல் சிறைசெய்ய விரும்புகிறதே! என்று அஞ்சுகிறது. உலகத்தை யெல்லாம் தனக்கு விரோதியாக்கித் தன்னைத் தனிமை செய்து தனிக்காவலில் சிறை செய்யப்படும் ஒரு கைதிபோலச் செய்து விடுமோ என்று ஆத்திரப் படுகிறது.

இந்தப் பரஸ்பர அவநம்பிக்கையையும் பயத்தையும் என்னென்பது? இரண்டு மகாயுத்தங்களின் பயனாகப் பயமில்லாத, சுதந்திரமுள்ள, சமாதானமும் சுபிட்சமும் நிறைந்த ஓர் உலகம் தோன்றும் என்று எதிர்பார்த்தார்கள் அல்லவா? இன்றோ இரட்டைப் பிறவியான இரு வேறு உலகங்கள் பரஸ்பர பயத்துடனும் பகைமை யுணர்ச்சியுடனும் வெறுப்புடனும் அவநம்பிக்கையுடனும் காட்சியளிக்கின்றன.

பொதுவுடைமை, ஜனநாயகம் என்ற இரண்டு விருட்சங்களையும் வேரிலேயே கொடிய புழுக்கள் அரித்துக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. சுயநலமும் பேராசையும் தற்பெருமையும் பொறாமையும் தனி மனிதனைக் கெடுப்பதுபோல் சமுதாயத்தையும் கெடுத்து விடக்கூடுமல்லவா? இத்தகைய வேர்ப் புழுக்கள் உள்ளுக்குள்ளே அரித்துக் கொண்டிருக்கும்போது, சுதந்திரமென்றும் சமதர்மமென்றும், சகோதரதர்மமென்றும் பேசுவதெல்லாம் பொருளற்ற வெறும் பேச்சேயாகும். சன்மார்க்க லட்சியங்களில் நம்பிக்கை இல்லாமலே அரசியல்வாதிகள் சுதந்திர தேவியையும் சமாதான தேவியையும் பிரதிஷ்டை செய்துவிடுவதாகப் பேசுவதும், அருகே யுள்ள சகோதரர்களை வஞ்சித்துச் செல்வமும் செல்வாக்கும் தேடிக்

கொண்டே உலகச் சகோதர தர்மத்தைக் குறித்தும் உலக ஒருமையைக் குறித்தும் வாய்ப்பறை அறைவதும் கேலிக்கூத்தே யாகும்.

அரசியல் பிரசினைகளைக் காட்டிலும் பொருளாதாரப் பிரசினை அதிமுக்கியமானது. இரண்டுவகைப் பிரசினைகளுக்கும் லட்சியம் வேண்டும், லட்சியத்தை அடைய வழியையும் வகுத்துக்கொள்ள வேண்டும். அதாவது, குறியும் வேண்டும், நெறியும் வேண்டும்; பொருளாதாரம் சமுதாயத்தின் ஜீவாதாரம். எனினும் உயிருக்கு உயிர் உயர்ந்த லட்சியம். உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படையான முப்பெருந் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்வது பொருளாதாரத்தின் பிரதான நோக்கம். இந்நோக்கம் நிறைவேறச் சட்டம் அதிகாரம் படை ஆகிய பல அங்கங்களும் அரசாங்கமாக அமைகின்றன. பேராசை வலிமையைப் பெருக்கிக் கொண்டு வல்லரசாகி வலிமையற்ற நாடுகளை வியாபார முறையில் சுரண்டவும், இந்நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தவும் தொடங்குகிறது. இரண்டு பேராசைகளுக்கிடையே போட்டி பொறாமை, புகைச்சல் ஏற்பட்டதும், பேராசை பேராசைபாகிறது. இப்படியேதான் இந்த இருபதாம் நூற்றுண்டிலே இரண்டு மகாயுத்தங்கள் கிளம்பிவிட்டன. போர் முடிந்தும் பொருளாதாரம் திருந்தவில்லை; சமாதானம் நிலைபெறவில்லை. யுத்தம் ஓய்ந்தும் யுத்த பயம் உலகத்தைவிட்டுப் போகவில்லை.

பரஸ்பர பயமும், சந்தேகமும், அவநம்பிக்கையும், 'அடிப்படையில் மனித வர்க்கம் ஒன்று' என்ற உண்மையையே மறைத்துவிடப் பார்க்கின்றன. 'மக்கட்குலம் ஒன்றே; உலகம் ஒன்றே' என்ற உணர்ச்சியுடன் ஒரு புதிய கூட்டுறவு முறையிலேதான் உலகத்திற்கு விமோசனம் ஏற்படவேண்டும். இதற்கு லட்சியத் தெளிவு வேண்டும். லட்சியமே பிளவுபட்டுக் கிடந்தால, சமயோசித நிலைமைகளுக்குக் கட்டுப்பட்டிருந்தால், உலகத்தில் நியாயம் ஏது, உள்ளத்தில் நிம்மதி ஏது?

நமது இந்தியாவிலும் இரட்டைப் பிறவியான இரு சமுதாயக் கொள்கை எவ்வளவு தூரம் நிம்மதியையும் சமாதானத்தையும் குலைத்து வருகிறது பாருங்கள்! இரு சமுதாயக் கொள்கையை வைத்துக் கொண்டே இந்தியாவில் ஒற்றுமையும் சகோதர நேசமும் ஏற்பட்டுவிடும் என்று நினைப்பது, அமெரிக்காவும் ரஷ்யாவும் 'இருவேறு உலகமாய்' இருந்து கொண்டே ஒத்து வாழ முடியும் என்று நினைப்பது போலத்தான்! பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இருந்த பழைய 'யஜமான்—அடிமை' உறவு மாறி ஒரு புதிய சகோதர உறவு ஏற்பட்டு வருகிறது என்று எண்ணும் போதே, ஏற்கெனவே ஓர் இந்திய சமுதாயமாக இருந்த ஹிந்து முஸ்லிம்கள் பரஸ்பர வேற்றுமை யுணர்ச்சியும் விரோத உணர்ச்சியும் கொண்டுவிட்டார்கள். இந்த விபரீத நிலையிலிருந்து எப்படியாவது இந்தியா ஒன்றுபடுவது நலம். இது உலகம் ஒன்றுபடுவதற்கே ஒரு முதற்படியாகும் என்ற நம்பிக்கையுடன் நான் இப்போது இவ்வுலகப் பிரதட்சிணத்தை ஒருவாறு முடித்துக் கொள்கிறேன்.

ஸம்ஸ்கிருதப் பயிற்சி

வே. நாராயணன்

ஸம்ஸ்கிருதம் என்றால் நன்கமைந்தது என்று பொருள். இது வேதமொழி, அநாதி, அழிவில்லாதது. ஒரு காலத்திலே பிறந்தவை யல்லவா அழிவுறுவன? ஸம்ஸ்கிருதத்திற்குப் பிறப்பு இல்லை, ஆதலால் அழிவு இல்லை. நம்முடைய இதிகாசங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் இம்மொழியிலேயே உள்ளன.

காவிய இலக்கணங் கண்ட தண்டியாசிரியர் சொல்கிறார்: “ஸம்ஸ்கிருதம் அஞ்ஞானமென்னும் இருளை நீக்குகின்றது. இம்மொழிச் சொற்களை நேர்மையுடன் பிரயோகிப்பவனுக்கு இது எல்லா நன்மைகளையும் பயக்கும்; பிரயோகமறியாது பேசுவோனுடைய சொற்களோ அவனுடைய மடமையையே காட்டும்” என்று.

ஏனைய லௌகிக மொழிகள் பிறப்புடையன; ஆகவே என்றுவது அழிவுறத்தான் வேண்டும். அவை உயிருடன் விளங்குங் காலத்தும் இளமை முதுமை முதலிய பரிணாமங்களை யடைகின்றன; என்றும் ஒருபடித்தாக இருப்பதில்லை. பழந்தமிழிற்கும் தற்போது வழங்குந் தமிழிற்கும் எவ்வளவோ வித்தியாசம். லத்தீன் மொழியைப்போல சங்கத் தமிழும் இறந்தொழிந்த மொழியே என்று சொல்லிவிடலாம்; அவ்வளவு மாறுபாடுகள் சொல்லினும் பொருளினும் ஏற்பட்டுவிட்டன. ஸம்ஸ்கிருதமோ என்றும் மாறுபடாத வடிவத்தையுடையது; வால்மீகி முனிவரும் வியாச முனிவரும் பாடிய பெருங் காவியங்கள் இன்றும் ஒலியிலோ பொருளிலோ மாறுபடாத சொற்களால் யாரும் எளிதிற் பொருள்கொள்ளும் வகையிலே அமைந்துள்ளன. அதனாலேதான் பவபூதி என்னும் கவிஞர் தாம் இயற்றிய நாடகங்களுள் ஒன்றின் முகவுரையிலே, “என்னுடைய கருத்துக்களுக்கு ஒப்பான கருத்துக்களையுடையவன் ஒருவனேனும் தோன்றுவான்; காலம் எல்லையற்றதன்றோ? அவன் என் சொற்களைப் பயின்று இன்புறுவான். அவனுக்காகவே இந்நூலை இயற்றுகிறேன்” என்றார். வேறு எந்த மொழிப் புலவராலும் இவ்வாறு கூற இயலாது; காலத்தத்துவம் எல்லையற்றதாகையால், தன்னையொப்ப ஒருவன் தோன்றக்கூடும். ஆயினும் தான் இயற்றிய காவியத்திலுள்ள சொற்கள் உருவத்திலோ பொருளிலோ மாறுபட்டு விடுவனவாதலால், அவ்வொருவனும் அக்காவியத்தை நுகர்ந்து இன்புற இயலாது போய்விடுமன்றோ?

ஸம்ஸ்கிருதச் சொற்களுக்கு உருவமோ பொருளோ காலக்கிரமத்திலே மாறிவிடாது என்னும் குணமே நம்முடைய நாகரிகத்தின் மேன்மைகளைப் பொதிந்து வைக்கும் க்ஷேமநிதியாக ஸம்ஸ்கிருதத்தை உதவச் செய்கின்றது. ஸம்ஸ்கிருதச் சொற்களுக்குப் பொருள் மாறுபாடு இல்லாமையாலேதான் வெகு காலத்திற்குப் பின்வந்த நம்மாலும் நம் முன்னோர் சேமித்துவைத்த கலைச் செல்வங்கள் நமக்கு உரியவையாகின்றன. யாதொரு திரிபுமின்றிப் பொருளைத் தெள்ளென விளக்குந்திறனே ஸம்ஸ்கிருதச் சொற்களை வகுத்தமைத்துக் கொண்டு மிக நுண்ணிய கருத்துக்களையும் ஐயந்திரிபற விளக்குவதற்கு ஏதுவாகின்றது. இத்தகைய குணங்களே ஸம்ஸ்கிருதத்தை நாம் எல்லோரும் அவசியம் கற்கவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன.

இக்காலத்திலே நடைபெறுகின்ற பிரிவினை இயக்கங்களாலேதான் ஸம்ஸ்

கிருதப் பயிற்சியின் அவசியத்தை எடுத்துக்காட்ட வேண்டியதாயிற்று.

நமது இந்திய நாட்டிலே நடையாடும் மொழிகள் அனைத்துமே ஸம்ஸ்கிருத மொழியின் பிராகிருதங்கள் என்று ஸம்ஸ்கிருத இலக்கண நூல்கள் கூறுகின்றன. பிராகிருதச் சொற்கள் மூவகைப்படுவன ;-தற்சமம், தற்பவம், தேசி—என்று. தற்சமச் சொற்கள் ஸம்ஸ்கிருத ஒலிவடிவையே உடையனவாம். தற்பவச் சொற்களோ வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறாகவும் ஸம்ஸ்கிருதச் சொல்லின் வடிவத்தினின்றும் எழுந்து மாறுபட்ட ஒலியையும் சிறுபான்மை மாறுபட்ட பொருளையுமே உடையனவாக விளங்குவன ; தேசிச் சொற்கள், காலம் தேசம் முதலியவற்றாலே மாறுபடுவதாலே, ஆங்காங்கு வெவ்வேறு வடிவங்களை யுடையனவாய் மற்றப் பிரதேசங்களிலோ காலங்களிலோ வழங்காதனவாய் இருப்பன. இவை பெரும்பாலும் அவ்வப்பொழுது அவ்வவ்விடங்களிலே யாதொரு விதியையும் அனுசரியாதத் தான்றோன்றிகளாக எழுகின்றன.

பல மொழிகள் வழங்குகின்ற நாடுகளைத் தன்னகத்தே கொண்ட நமது தேசத்திலே, மக்கள் அனைவரும் மொழி வேற்றுமை, நாட்டு வேற்றுமை இவற்றைப் பாராட்டாமல் ஒன்று சேர்ந்து வாழும்போது, பல்வகைப்பட்ட மொழிகளிலே பொதுவாக வழங்குகின்ற தற்சமச் சொற்களே பிராதானியத்தை அடைகின்றன. தற்பவச் சொற்கள் நாட்டிற்கு நாடு மாறுபடுவதால், அவற்றின் ஸ்தானத்திலே தற்சமச்சொற்களே வழங்கப்பெறுகின்றன. தேசிச் சொற்கள் வழக்கொழிந்து போகின்றன; இது இயற்கை. இதனால் ஒவ்வொரு மொழியும் ஸம்ஸ்கிருதச் சொற்களை மிகுதியாகக் கொண்டு விளங்குகின்றன. அவ்வம்மொழியினரும் ஸம்ஸ்கிருதத்தைத் தேசத்திற்குரிய பொது மொழியாகக் கொள்வது எளிதாகின்றது. இந்தச் சௌகரியத்தை விடுத்து, தேசத்தின் மக்களிற் பெரும்பகுதியினர் நாட்டு மொழி பொன்றினைப் புரிந்துகொள்கிறார்கள் என்னும் காரணத்தைக்கொண்டு அம்மொழியினையே தேச பாஷையாக்க முயல்வது சரியன்று ; பிற மொழியினருக்கு அம்மொழியைக் காட்டிலும் ஸம்ஸ்கிருதத்தைப் பொது மொழியாகக் கற்பது எளிது.

ஆயின், ஸம்ஸ்கிருதத்தை அகில இந்திய மொழியாக்குவதற்குத் தடை செய்வது எது? ஸம்ஸ்கிருத இலக்கணம் கோணலும் மாணலுமாய் கற்போருக்கு அதிகத் துன்பத்தைத் தருகின்றது என்பதே முக்கிய காரணமாகச் சொல்லப்படுகின்றது. இது உண்மைக்காரணம் அன்று. நாட்டுமொழிகளிற் பல ஸம்ஸ்கிருதத்தினும் அதிகக் கறடுமுரடான இலக்கணங்களையுடையவை ; உதாரணமாக, ஸம்ஸ்கிருத இலக்கணத்திலும் கடினமானது ஹிந்தி மொழியின் இலக்கணம். ஆனால் ஹிந்தி பேசப்படுகின்ற நாட்டுப்பகுதி, ஒன்று இருக்கிறது. அங்குச்சென்று வாழ்ந்தால் அவ்வூர்க் காற்றோடு ஹிந்தி மொழியையும் நாம் எளிதில் உட்கொள்ளலாம். இப்படி இல்லாதது ஸம்ஸ்கிருதத்திற்கு ஒரு குறையென்றே சிலர் கூறுவர். உண்மையில் இது குறையன்று — குணமே. ஸம்ஸ்கிருதமும் ஒரு பிரதேசத்திலே வழங்கும் மொழியாகிவிட்டால், பிராகிருத மொழிகளைப்போலவே அதுவும் சொற்பொருள்களிலே சிதைவுற்றுக் கெட்டுப்போம். பொதுமக்களின் பேச்சு மாறுபாடுகளாலும் உச்சரிப்பு வேறுபாடுகளாலும் ஸம்ஸ்கிருதமும் சீர்குலைந்த மொழியாகிவிடும். அப்படிக் கேடுறாது தன் சிறப்பியல்பு சிறிதும் குன்றாதவாறு ஸம்ஸ்கிருதத்தைப் பாதுகாப்பது எது என்றால் அது பாமர மக்களாலே வழங்கப்படா திருத்தலேயாம்.

ஸம்ஸ்கிருதப் பயிற்சியால் நாம் வேறொரு நன்மையையும் பெறுகிறோம். ஸம்ஸ்கிருத அக்ஷரங்களைத் திருத்தமாக உச்சரிக்கக் கற்பதால் நாக்கு நமக்கு நன்றாக வணங்குவதாகின்றது. ஸம்ஸ்கிருத இலக்கணத்தின் பாகுபாடுகளும் சொற்களின் அமைப்பும் நமக்குத்

தொடக்கத்திலே பெருந்துன்பத்தைத் தந்தாலும், முடிவிலே நம்மை எந்த விதிகளுக்கும் இணங்கி நடக்குந்தன்மையுடையவர்களாகச் செய்கின்றன. ஆரம்பத்திலே யாதொரு முறையுமில்லாதவை போலத் தோன்றுகின்ற இவ்விதிகளையே அர்த்த புஷ்டியுடையவை என்று நாம் பின்பு அறிகிறோம். விதிகளைப் பின்பற்றி நடக்குமாறு நம்முடைய மனம் வாக்கு மெய் ஆகிய மூன்று கரணங்களையும் வசப்படுத்தப் பழக்குவதாலே மனத்திலும் பேச்சிலும் தெளிவும் செயலில் வன்மையும் உண்டாகின்றன. தெளிவும் உறுதிப்பாடுமுடையவனுக்கே தற்போதம் உதிக்கின்றது. வாழ்க்கையின் பரம தாத்பரியத்தை உணர்ந்து இம்மையிலே பேரின்பத்திலே திளைக்கும் பெரியோனாக விளங்குகிறான்.

நல்லது ; ஆனால் ஸம்ஸ்கிருதம் கற்பது எவ்வளவோ கடினமாயிருக்கிறதே ! பேரின்பத்தை நுகர்வதற்கு வேறு சுலபமான வழியில்லையா என்று கேட்கக் கூடும். ஸம்ஸ்கிருதங் கற்பது கடினமேயன்று ; தற்காலப் பள்ளிக்கூடங்களே ஸம்ஸ்கிருதங் கற்பதைக் கடினமாக்கிவிட்டன. ஸம்ஸ்கிருதத்தை இளமையிற் கற்றால் யாதொரு கஷ்டமும் இராது. சப்தங்களையும் தாது ரூபங்களையும் சந்தையாகச் சொல்லி மிகச் சுலபமாக மனப்பாடமாக்கிவிடலாம். புஸ்தகம், எழுது பலகை, காகிதம், எழுதுகோல் இவற்றிற்குச் செலவிடவேண்டாம். பின்பு அமரகோசத்தை மனப்பாடஞ் செய்யலாம். அப்புறம் ஸம்ஸ்கிருதம் ஜலப்பிராயந்தான். இவ்வாறு தொன்று தொட்டுக் கல்வி பயிற்றிவந்த முறையை மாற்றி யமைத்தது முதற்கொண்டே, ஸம்ஸ்கிருதக் கல்வி மங்குவதாயிற்று. அதோடு ஸம்ஸ்கிருதம் நம்மவருக்கு அளித்துவந்த அமுதவுணவும் நமக்குக் கிடையாமற்போய், நாம் ஞானத்திலும் மெய்யறிவிலும் கீழ்ப்பட்டவர்களாகி விட்டோம். இனியேனும் ஸம்ஸ்கிருதப் பயிற்சியை நல்ல முறையிலே தொடங்குவித்து எங்கும் பரப்பவேண்டும். இல்லையானால், நம்முடைய நாகரிக வாழ்க்கை சீர்குலைந்துவிடும் ; நம்முடைய முன்னோர்கள் தமக்கென வாழாத மேன் மக்கள் என்றும் உள்ளத்தூய்மையும் ஒழுக்கமும் உடையவர்கள் என்றும் பெற்றிருந்த பெரும்புகழையும் இழந்தவர்கள் ஆவோம். அவ்வாறு இழிவுறாமல் மேன்மக்களாகவே நாம் வாழ விரும்பினால், நம்மாற் கூடியவரையிலே ஸம்ஸ்கிருத மொழியைப் பயின்று, நம்முடைய பண்டை நாகரிகச் செல்வங்களை நம்முடைய அனுபவத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு, நம்முடைய தாய்மொழியையும் நமது தேசத்திலுள்ள பிறநாட்டு மொழிகளோடு ஒன்றாகும்படி ஸம்ஸ்கிருத மயமாக்க முயல்வோமாக. நாம் முயன்றாலும் முரண்பட்டாலும், நாட்டு மக்கள் ஒன்றுபடும்போது, நம்முடைய நாட்டுமக்கள் அனைவரும் மேன்மையோடு விளங்குங்காலம் விரைவில் வந்துவிடும். பாரதநாடும் எண்ணத்திலும் பேச்சிலும் செயலிலும் ஒன்றாக விளங்கும். அப்பொழுது பாரதப் பொதுமொழியாக விளங்கப்போவது ஸம்ஸ்கிருதமே யன்றோ ?

‘நான் மாலுமி ஆகவேண்டும்’

பெ. நா. அப்புஸ்வாமி

‘அழகான ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. ஆனால் குழந்தை சற்றே சிறிதாக இருக்கிறது. பன்னிரண்டாவது குழந்தையல்லவா?’ என்றாள் மருத்துவச்சி.

அக்குழந்தையின் தாய் தந்தையர்கள் மருத்துவச்சியின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தி, அதை வெகு ஜாக்கிரதையாகவும், கவலையோடும் வளர்த்து வந்தார்கள். ஆயினும், பல தடவைகளில் அதற்கு நோய் கண்டு, அது பிழைப்பது அரிது என்று வீட்டு வைத்தியர் சொல்லும்படி இருந்தது. ஆனால், தெய்வாதீனமாக, அந்தக் குழந்தை இளம் பிராய நோய்களுக்கெல்லாம் தப்பிப் பிழைத்தது. நன்றாகத் தேறிவந்தது.

அக்குழந்தை அவர்களின் ஐந்தாவது பையன்: பன்னிரண்டாவது குழந்தை. அதன் சகோதர சகோதரிகள் எல்லாரும் சொன்னபடிக் கேட்டுத் தங்கள் சட்டையையும் உடலையும் அழுக்காக்கிக் கொள்ளாமல், ஜாக்கிரதையாக விளையாடி வந்தார்கள். ஆனால், அதுமட்டும் எப்போதும் துஷ்டத்தனம் செய்து, உடலை அழுக்காக்கிக்கொண்டும், சட்டையைக் கிழித்துக்கொண்டும் இருந்துவந்தது. ஆதலால், வீட்டுக்கு யாராவது வந்தால், அக்குழந்தையை அவர்களுக்குக் காட்ட அதன் தாய் தந்தையர் கூசினார்கள்.

அவர்கள் கூசுவதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. யார் வந்தாலும் அந்தக் குழந்தை சும்மா இராது. அவர்களைத் தூண்டித் துளைத்து, ‘அது என்ன? இது என்ன? அதைக் காட்டு! இதைச் சொல்லு’ என்றெல்லாம் தொந்தரவு செய்யும். இல்லாவிட்டால், வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் எடுத்துத்திறந்து மூடி, கொட்டிக் கவிழ்த்து, ஏதாவது செய்துகொண்டே இருக்கும்.

அதற்கு இயற்கையாக உள்ள குறுகுறுப்புச் சுபாவத்தால் அது கணநேரமும் சும்மா இராது. அதன் தாய்தந்தையர்கள் அந்த சுபாவத்தைத் தடுக்கும் பொருட்டு அதற்குப் பலமுறை போதனை செய்தும், அதைப் பலமுறைக் கண்டித்தும், சிற்சில வேளைகளில் பூசைக்காப்புக் கொடுத்தும் வந்தார்கள். ஆயினும் அக்குழந்தையின் குறுகுறுப்புச் சுபாவத்தை அவர்களால் அடக்கவே முடியவில்லை.

அக்குழந்தை சிறுவனாகித் தக்க வயது வந்ததும், அதன் பெற்றோர்கள் அதை லௌத் என்னும் ஊரிலுள்ள சிறு பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். அச்சிறுவன் அங்கே கருத்தோடு படித்துவந்தான். அப்போது ஒருநாள் அவனும் அவன் வகுப்பில் படித்துவந்த மற்றொரு சிறுவனுமாக அருகிலுள்ள ஒரு கடற்கரை ஊருக்குச் சென்று, அங்கே சிலகாலம் தங்கி, கடலின் அழகைக் கண்டு வியந்து வந்தார்கள். அதைப் பார்த்துப் பார்த்து, ஆனந்த பரவசமானார்கள். அங்கிருந்து அச்சிறுவன் மீண்டும் பள்ளிக்கூடத்துக்கு வந்தபோது, தான் மாலுமியாகி, கடலில் எங்கும் சென்று சுற்றிவரவேண்டும் என்னும் ஆசை அவன் மனத்தில் வேரூன்றிவிட்டது.

அவன் விடுமுறை நாட்களில் வீடு வந்துசேர்ந்ததும், தன்னுடைய ஆவலைத் தன் தகப்பனாருக்குத் தெரிவித்தான். ஆனால், அவருக்குத் தம் கடைக்குட்டி மகன் மாலுமியாவதில் சம்மதமே இல்லை. அவன் மதபோதகர் ஆகவேண்டும் என்பது அவர் கொண்ட கருத்து.

இரண்டு மூன்று வருஷம் சிறுவன் தகப்பனாரோடு மன்றாடினான். அவர் சிறிதும் இணங்கவில்லை. கடலைப் பற்றிய பேச்சே எடுக்கக்கூடாது என்று அவர்

கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அப்படியும் அவன் விடாதது கண்டு, கடைசியில் தான் கொண்ட எண்ணம் எவ்வளவு அறிவீனமானது என்று தம் மகனுக்குத் தெரிவித்துவிட்டால், பின்பு அவன் 'கடல், கடல்' என்று தொந்தரவு செய்வதை நிறுத்திவிடுவான் என்று நினைத்தார். அதற்காக ஒரு ஆலோசனை செய்தார்.

இங்கிலாந்திலுள்ள ஹல் என்னும் துறைமுகத்திலிருந்து போர்த்துக்கல்லிலுள்ள லிஸ்பன் நகரின் துறைமுகத்துக்கு ஒரு வியாபாரக் கப்பல் முறையாகச் சென்றுவந்தது. அது பாய்மரக் கப்பல். பெரிய கப்பலும் அன்று. சாமான்களை ஏற்றிச்செல்லும் கப்பலாதலால், அதில் சௌகரியங்கள் மிகக் குறைவு. அசுத்தங்களோ அதிகம். மேலும் அது சிறிய கப்பலாகையால், பிஸ்கே விரிகுடாவில் செல்லும்போது அங்கு வீசும் புயற்காற்றில் அகப்பட்டு, மிகவும் ஆடி அசைந்து, கவிழ்ந்து விடும் போல் தத்தளிக்கும். அதன் மேலதிகாரி பெரும்பான்மையும் கூலி வேலை செய்பவர்களோடு பழகுபவர். ஆதலால், எல்லாக் காரியங்களையும் அவர் முரட்டுத்தனமாய் அதிகார தோரணையிலேயே நடத்திவந்தார். உடலுக்கும் மனத்துக்கும் அருவருப்பான இத்தனை கஷ்டங்களும் ஒன்றுகச் சேர்ந்த கப்பலில் சில மாதம் தம் மகன் கழிக்கும்படி செய்து விட்டால் தென்னலிராமன் வளர்த்த பூனை, பாலைக்கண்டு அஞ்சியது போல, அவன் கடல்மீது வெறுப்புக் கொண்டு, பின்பு தண்ணீரைக் கண்டாலே ஒதுங்கிப் போவான் என்பது அவர் எண்ணிய ஆலோசனை.

ஆனால், அவர் நினைத்தபடி நடக்கவில்லை. அத்தனை கஷ்டங்களாலும் சிறுவனுடைய மனம் சற்றும் தளர்வடையவில்லை. அதற்கு நேர்மாறாக, அவனுக்குக் கடல்மீதிருந்த வாஞ்சை முன்னிலும் அதிகரித்தது. அதைக் கண்டு, அவன் தகப்பனர் அச்சிறுவனுடைய ஆசையை அதற்கு மேலும் தடைசெய்ய முயலவில்லை. அவன் தன் மனம் போலவே நடந்துகொள்ளட்டும் என்று விட்டுவிட்டார். அப்பொழுது அச்சிறுவனுக்கு வயது பதினொன்கு.

மாலுமித் தொழிலில் இறங்கியபின், அச்சிறுவன் தன் வேலைகளைச் சந்தோஷமாகவே செய்துவந்தான். அவ்வேலைகளையெல்லாம் விளையாட்டுக்களாகக் கருதியவன்போல், உற்சாகமாக அவற்றைப் பற்றித் தன் வீட்டுக்குக் கடிதம் எழுதினன். அதைப் படித்துப் பார்த்த அவன் தாய்தந்தையர் தங்கள் மகனுடைய மன உறுதியையும், அவனுக்கு உண்மையாகவே கடலின்மீது இருந்த வாஞ்சையையும் நன்கு தெரிந்துகொண்டார்கள். தங்கள் மனம்போல அவனைச் செய்யும்படி வற்புறுத்தாமல், அவன் மனம் போலவே நடக்கத் தாங்கள் அனுமதி கொடுத்தது நல்லதாயிற்று என்று சந்தோஷமடைந்தார்கள்.

அச்சிறுவன் கடலுக்குச் சென்று ஒரு வருஷம் ஆகுமுன், அவன் இருந்த கப்பல் கோப்பென்ஹேகன் அருகில் நடந்த கடற்சண்டையில் கலந்துகொள்ள நேர்ந்தது. அப்போது படைவீரர்கள் பற்பல விதமான துணிகரச் செயல்கள் இயற்றியதை அச்சிறுவன் கவனித்தான். அவனும் அவர்களைப்போலவே துணிகரமாக நடந்துகொண்டான்.

அச்சிறுவனுக்கு இளம்பிராயத்திலிருந்த குறுகுறுப்புக் குணம் அவன் மாலுமியான பின்பும், அவனைவிட்டு நீங்கவே இல்லை. அவனுக்குப் பதினைந்து வயதாயிருக்கும்போது, தன்னுடைய நெருங்கிய பந்துவாகிய காப்டன் ப்ளின்டர்ஸ் என்பவர் ஒரு கப்பற்றலைவராயிருப்பது தெரியவந்தது. அவருடைய கப்பல் தென் கடல்களிலுள்ள தீவுகளையும் அவற்றின் அருகிலுள்ள பிரதேசங்களையும் துருவி ஆராயவும் புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கவும் புறப்பட்டுப் போவதாக அவன் கேள்விப்பட்டான். அதில் தானும் சேர்ந்துகொண்டு, கூடப் புறப்பட்டான்.

நன்கு வளர்ந்த அச்சிறுவன், மலர்ந்த முகத்தோடும், குதூகலமான நடத்தையோடும் எல்லா வேலைகளையும் சோம்ப

வில்லாமல், சலிப்பில்லாமல், எப்போதும் சந்தோஷமாய்ச் செய்துவந்தான். அதைக் கண்டவர்கள் அனைவரும் அதைப் பாராட்டி, அவன்மீது அன்பு பூண்டார்கள்.

அவர்கள் ஏறிச்சென்ற கப்பல் ஆஸ்டிரேலியா நாட்டின் கரை ஓரங்களைச் சிலகாலம் ஆராய்ந்தது. பின் அது உளுத்துப்போய், கடலில் செல்லுவதற்கே தகுதியற்றதாய் போய்விட்டது. ஆதலால், அதில் சென்றவர்கள் தாங்கள் மேற்கொண்ட முயற்சியைக் கைவிட்டு, வீடு திரும்ப வேண்டியதாயிற்று. அவர்கள் மற்றொரு கப்பலில் ஏறி, தம் நாடு நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் ஒருவாரம் பிரயாணம் செய்திருப்பார்கள். அதற்குள் அவர்கள் புதியதாக ஏறிய கப்பலுக்கும் ஆபத்து வந்துவிட்டது. கடலில் மறைந்துகிடந்த பவளப்பாறை ஒன்றின் மீது அக்கப்பல் மோதி, அதில் நன்றாகச் சிக்கிக்கொண்டது.

அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டும், அதை விடுவிக்கமுடியவில்லை. பின்பு பாடுபட்டு, அக்கப்பலிலிருந்த சில சாமான்களை மட்டும் எடுத்துக்கொண்டு, படகுகளிலேறி, அருகேயிருந்த ஒரு மணல் திட்டை வந்தடைந்தார்கள்.

அவர்கள் தங்கிய இடம் யாதொரு வாழ்க்கையும் அற்றது. அபாயகரமானது. அதன் அருகிலுள்ள கடற்பிரதேசத்தில் கப்பற் போக்குவரவு அதிகம் கிடையாது. அவர்களிடமுள்ள உணவுப் பண்டங்களோ மூன்று மாத வாழ்க்கைக்குத்தான் காணும். தற்செயலாய் ஏதாவதொரு கப்பல் வராதா? நம்மை ஏற்றிக்கொண்டு போகாதா? என்று எண்ணிக்கொண்டு நடுக்கடலில் கரைந்துபோகக்கூடிய ஒரு மணற்திட்டில் காத்துக்கொண்டிருப்பது அறிவீனமேயாகும், அல்லவா? ஆகையால் அக்கப்பலின் தலைவர் தம் ஆட்களெல்லோரையும் அங்கே சிலகாலம் காத்திருக்கும்படி சொல்லி, அவர்களுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, தாம் மட்டும் சில மாலுமிகளோடு சிறு படகு ஒன்றில் ஏறிப் புறப்

அடுத்த விளையாட்டு பந்தயத்தில்

அம்ருதா
ரத்த சுத்தி
திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.
நரம்புகளை முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நிஜாம், ஆந்திரா ஜில்லாக்கள் தமிழ் நாட்டிற்கு ஏஜண்டுகள்
ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
பேர்ஹாம்பூர் — செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை

பொருளாதாரம்

கூட்டுறவும் நாட்டுயர்வும்

கே. ராமமூர்த்தி, அண்ணாமலை நகர்

கூட்டுறவு இயக்கம், மக்களின் பொருளாதார வாழ்க்கையில் அதிசயிக்கத்தக்க பல மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணம் கூட்டுறவுக் கொள்கையின் தனிச் சிறப்பேயாகும். இக்கொள்கை பொருளாதாரத் துறைகள் பல்வற்றிற்கும் எடுத்தாளப்படும் வண்ணம் இனிதே அமைந்துள்ளது. கூட்டுறவு முறையினால் ஏழைமக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தமுடியும் என்று கண்ட மேலைநாடுகளான டென்மார்க், ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகளும், ஆசிய நாடுகளான சீனா, ஜப்பான் போன்ற நாடுகளும் சிறப்பாக நமது இந்தியாவும் கூட்டுறவு இயக்கத்தினை நன்கு வளரச் செய்துள்ளன. மற்ற நாடுகளைவிட ஏழை விவசாயிகளின் தொகை அதிகமாகவும், மக்களின் வாழ்க்கை நிலை மோசமாகவும் உள்ள இந்தியாவிற்குக் கூட்டுறவு இயக்கம் மிக இன்றியமையாத தொன்றாகும்.

விவசாயக்கடன் பளுவும், முதலாளிகள் லேவாதேவிக்காரர் ஆகியோரின் பேராசையும் ஏழை இந்தியனை இருபக்கமும் நெரித்துக்கொண்டிருந்த காலையில், கூட்டுறவு இயக்கமே அவனுக்கு பாலை வெளியிடைக் காணப்படும் பசும்புல் வெளிபோல் ஆறுதல் அளித்தது. கூட்டுறவே அவனுக்கு அபயமும் அளித்து சிறந்த படிப்பினைகளான தன்னுதவி, தன்னேர்க்குதவி, சிக்கனம் ஆகியவற்றை அவன் மனத்தில் பதியச் செய்தது. வறுமையினாலும், இயற்கையிலேயே வரம்புக்கு மீறிப் பயனற்ற காரியங்களில் செலவு செய்யும் பழக்கத்தினாலும், இந்தியன் மீளாக்கடனில் மூழ்கினான். கடனாளியாகவே பிறந்தான்; கடனாளியாக வாழ்ந்தான்; கடனாளியாகவே மரித்தான். அவனுற்ற அல்லல்கள் மிகப்பல. கல்லாதவனாக வாழ்ந்தான். நரிகளைப்போன்ற நயவஞ்சகம் மிக்க லேவாதேவிக்காரர்களின் வலையில் சிக்கினான். மீள வழியறியாது திகைத்தான். கடன் சுமையினால் தாக்குண்டு திணறினான். அவன் நிலங்களும் அவனிடமிருந்து பறிக்கப்பட்டன. அன்னியராட்சி முறையில் ஏற்பட்ட சட்ட திட்டங்கள் அவன் நிலையை மோசமாக்கின. இத்தகைய சூழ்நிலையில் இந்திய விவசாயியை கடன் தொல்லையினின்று மீட்க "கூட்டுறவு" என்னும் இளமதி தன் பால்போன்ற கிரணங்களை பரப்ப ஆரம்பித்தது! இங்ஙனம் பண உதவி செய்யும் நோக்கத்துடன் தோன்றிய கூட்டுறவு இயக்கம், இன்று பொருளாக்

பட்டார். 750 மைல் தூரம் அபாயகரமான கடலில் பிரயாணம் செய்து, மக்கள் வாழும் நாட்டை அடைந்து தம் துணைவர்களின் நெருக்கடியான நிலையை அவர்களுக்குத் தெரிவித்தார். அங்கிருந்து ஓர் கப்பலை அழைத்துவந்து அவர்களைக் காப்பாற்றினர். பின்பு அவருடைய முயற்சியால் அவர்கள் எல்லாரும் பத்திரமாக நாடுவந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு பதினைந்து வயதுக்குள்ளேயே பற்பலவிதமான அபாயமான அனுபவங்களுக்கு உள்ளாகியும், பல சாகஸச் செயல்களைப் புரிந்தும். மிகச் சிறந்த நாடு தேடியாக விளங்கிவந்த இந்தச் சிறுவன்தான் ஸர் ஜான் பிராங்க்ளின். பிராங்க்ளின் இறந்துபோய் இப்பொழுது சரியாக நூறு வருஷங்கள் ஆகின்றன.

கம் (Production) பொருள் விநியோகம் (Distribution), பாங்கு முறை (Banking); பொருள் விற்பனை (Marketing), வீடு கட்டுதல், போன்ற எண்ணற்ற பொருளாதாரத் துறைகளில் எடுத்தாளப்பட்டு சிறந்ததோர் இயக்கமாகப் பரிணமித்துள்ளது. இக்கூட்டுறவுக் கொள்கையினை நன்கு பரவச்செய்தால், இந்தியப் பொருளாதார வாழ்க்கையில் மிகப் பெரிய முன்னேற்றத்தினைக் காணலாம் என்பது திண்ணம்.

கிராமக்கடன் பளு விவசாய நாடுகளில் பொதுவாக ஒரு சாதாரணச் செய்திதான். ஆனல் இந்தியாவைப்போல் மிகப் பெரிய அளவில் பயனற்ற முறையில் அதிகரித்த கடன் பளுவினை ஏற்ற நாடு வேறொன்றுமிலது. இக்கடன் தொகை, இந்திய விவசாயியின் வறுமை, அறியாமை, பயனற்ற செலவுகள், முன்னோர் விட்டுச் சென்ற கடன், சத்தில்லாத மட்டரக நிலம் ஆகிய காரணங்களால் வெகு விரைவில் விஷம்போல் ஏறியது. மேலும், பஞ்சம், பட்டினி, நோய் இவற்ருல் பாதிக்கப்பட்ட போதிலும், நிகரமாக அதிகரித்துக்கொண்டு வரும் மக்கள் தொகையும் விவசாயியின் நிலைமையினைக் கேவலமாக்குவதில் ஒரு காரணமாகும். கிராமக்கடன் தொகை பல அறிஞர்களால் பலவாருகக் கணக்கிடப்பட்டுள்ளது. சமீபகாலத்தில் ஆராய்ந்த அறிஞர்களின் கணக்குப்படி ரூ 1500 கோடிக்குமேல்கூட கிராமக் கடன் தொகை போகிறதென்பதை எழுதவே கை நடுங்குகின்றது! இத்தகைய கேவலமான நிலையிலிருந்து இந்தியப் பொருளாதார வாழ்க்கை, விடுதலைபெற்று அபிவிருத்தியைக் காண வேண்டுமானல் சட்டங்கள் மட்டும் பயனுள்ளவையல்ல; மக்களின் மனப்பான்மையும் மாறுபாடு அடைய வேண்டும். தன்னிலையைத் தானே கற்றறியவேண்டும். இதற்குக் கூட்டுறவுக் கல்வி பரவுதல் மிகவும் அவசியமானது.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைப் பற்றி பல அறிஞர் குழுக்கள் ஆராய்ச்சிசெய்துள்ளன. விவசாயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்த அரசியலாளர் குழு (Royal Commission on Agriculture Report-1928) கூறியதாவது: "கூட்டுறவு வெற்றி பெருவிடில், இந்தியக் கிராம வாழ்க்கையின் முக்கிய நம்பிக்கையொன்று சிதறுண்டு போனதாகும்." ஸ்ரீ ஆர். ஜி. சாரையா (R. G. Saraiya) அவர்கள் தலைமையில் அகில இந்தியக் கூட்டுறவுக் குழுவினர் (All-India Committee on Co-operation) இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கான திட்டமொன்றினை 1945-ல் ஆராய்ந்து வெளியிட்டுள்ளனர். இதன்மூலம் கூட்டுறவு இயக்கத்தின் சக்தியையும் அது இந்தியப்பொருளாதார முன்னேற்றத்தில் எவ்வளவு தூரம் பங்கெடுத்துக்கொள்ளும் என்பதையும் தெளிவாக அறிய முடிகின்றது.

இப்படி அகில இந்திய சிறப்பு வாய்ந்த கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் வளர்ந்த கதை மிகவும் ரசமானது. அடுத்தடுத்து 1896-97 லும் 1899-1900 லும் ஏற்பட்ட இரண்டு பஞ்சங்கள் மக்களின் பொருளாதார வாழ்க்கையை குலையச் செய்ததுடன், இந்திய விவசாயிகளின் நிலைமையினையும் சீர்குலைத்தன. ஐரோப்பாவில் நடைபெற்று வந்த விவசாய முறைகளையும் நிலபாங்குகளின் அமைப்பினையும் ஆராய்ந்து ஒரு அரசாங்க வெளியீடு தயாரிக்கும்படி 1892-ல் சென்னை துரைத்தனத்தார் ஸர் பிரடெரிக் நிகல்ஸன் (Sir Frederick Nicholson) என்பவரை நியமித்தனர். ஜெர்மானிய நாட்டில் வழங்கிய "ரெய்பெய்சன்" கூட்டுறவு நிதிச்சங்கங்கள் எங்ஙனம் கிராம மக்களிடையே சிக்கனம் முதலிய கொள்கைகளை உயர்ந்த முறையில் பரப்புகின்றன என்பதைக் கண்டறிந்த நிகல்ஸன், சென்னை மாகாணத்திற்கும் இத்தகைய கூட்டுறவு நிதிச்சங்கங்களை சிபாரிசு செய்தார். இதே காலத்தில் ஐக்கிய மாகாணத்தினரான டூபர்னே (Mr. H. Dupernex) சில கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அவைகளின் அனுபவத்தைக்கொண்டு பொதுமக்கள் பாங்கு

களைப்பற்றி ஒரு நூல் வெளியிட்டார். பஞ்சங்களினூற் பல துன்பங்களை அனுப வித்த விவசாயிகள் இத்தகைய நிதிச்சங் கங்களுக்கு நல்ல ஆதரவு காட்டினர். இதைக்கண்ட துரைத்தனத்தார் ஒரு விசேடக் குழுவினரின் ஆலோசனையின் படி 1904-ல் கூட்டுறவு நிதிச்சங்கங்கள் சட்டம் ஒன்றினை நிறைவேற்றினர். இச்சசட்டத்திற்குப் பின்னர் கூட்டுறவு நிதிச்சங்கங்கள் பெருகலாயின. ஆயினும் 1904-ம் ஆண்டுச்சட்டம் விவசாயிகளுக் குப் பணஉதவி செய்தலொன்றையே நோக்கமாகக்கொண்டது. ஆகவே பணஉதவி தவிர மற்றப் பொருளாதாரத் துறைகளிலும் கூட்டுறவுக் கொள்கை யினைக் கையாளும் பொருட்டு 1912-ம் வருஷத்தில் புதியதோர் சட்டமியற்றப் பட்டது. இவ்விரு சட்டங்களுக்குப் பின் கூட்டுறவு இயக்கம் நன்கு பலப் படுத்தப்பட்டு வளருவதாயிற்று. 1914-ல் இவ்வியக்கத்தை பரிசீலனை செய்த மாக்லகன் குழுவினர் (Maglagan Committee) கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் நன்கு வேரூன்றி விட்டது என்று அறிந்தனர். பல மாகாணங் களிலும் விசேஷக் குழுவினர் நியமிக்கப் பட்டுக் கூட்டுறவுச் சட்டங்கள் தோன்ற லாயின. இவைகள் கூட்டுறவின் தனிச் சிறப்பினை உணர்ந்த ஒவ்வொரு மாகாண மும் தனது பொருளாதார வாழ்வினை உயர்த்திக்கொள்ளச் செய்த முயற்சியின் விளைவுகளே எனலாம்.

கூட்டுறவு இயக்கம் தோன்றியது முதல் ஏழை விவசாயிகளுக்கு எண் ணிறந்த நலன்களைப் புரிந்து வந்திருக் கின்றது. பல சிறு தொழில்கள் வளர வும், நவீன விவசாயத் தொழில் முறை களைக் கையாளவும், விவசாயக்கருவிகள், நிலவளத்திற்கான உரங்கள் ஆகியவை வாங்கவும், கடன்களைக் கழிவு செய்யவும் தேவையான பணஉதவியை அளித்து விவசாயிகளின் நிலையினை ஓங்கச் செய் துள்ளது. கடன்களை குறைந்த வட்டிக் குக் கொடுத்து விவசாயிகளை லேவா தேவிக்காரர்களின் பிடியினின்று விடு வித்துள்ளது. பணஉதவியைத் தவிர மற்றப் பொருளாரத் துறைகளிலும் இவ்வியக்கம் ஏழைகளுக்கு மிக்க நன்மை செய்திருக்கின்றது. பொருள்களின் விலை நடுவர் (Middlemen) களால் தான் அதிகமாகின்றது என்று கண்ட கூட் டுறவு விநியோக முறை (Distributive Co-operation) நடுவர்களை நீக்கி விடுவதில் கண்ணுங் கருத்து மாய் இருக்கின்றது. பொருள்களைப் பயன்படுத்துவோரே கூடி வாங்குவதால் இலாபம் நடுவர்களுக்குப் போகாத வண்ணம் தடை செய்யலாம். இலாபத் தைக் கூட்டுறவுப் பண்டசாலைகளின் உறுப்பினர்க்கு அவர்கள் வாங்கும் பொருள்களின் மதிப்பிற்கேற்றவாறு பிரிப்பதால் குறைந்த விலை, சிக்கனம் போன்ற பண்புகள்பரவுகின்றன. மேலும் கூட்டுறவுப் பண்டசாலைகள் உயர்ந்த ரகப் பொருள்களை உறுப்பினர்க்கு விற்கின்றன. இப்படிப் பொருள்களை வாங்கி விற்பனை செய்யும் விநியோகக் கூட்டுறவு பண்டசாலைகள் மட்டுமின்றிப் பொருளுற்பத்தித் துறையிலும் கூட் டுறவு முறை பயன்படுகின்றது.

இங்ஙனம் பொருளுற்பத்தி செய் வோர் மிக்கத் திறமையுடன் கூட்டுறவு முறையில் கரும்பு, பால், கைத்தறி ஆடைகள் முதலிய பொருள்களை விற்பனை செய்துள்ளனர். அவசியமற்ற நடுவர்கள் அகற்றப்படுவதால் பொருள் களின் விலையில் பெரும் பகுதி உற்பத்தி செய்வோரைச் சென்றடைகின்றது. பொருள்களும் மலிந்த விலையில் விற்கப் படுகின்றன. வாழ்க்கைத் தரத்தினை (Standard of Living) ஓங்கச் செய்யும் நோக்கத்துடன் பல கூட்டுறவு நிலையங்களும் உள்ளன. கூட்டுறவு நிதிச் சங்கங்களிலிருந்து கடன்பெற்று வீடுகள் பல கட்டப்பட்டுள்ளன. பல தரிசு நிலங் களையும் கூட்டுறவு முறையில் சாகுபடிக் குக் கொண்டுவந்துள்ளனர். சென்ற உலகப் போரின்போது கூட்டுறவு இயக் கம் நல்ல வளர்ச்சியைப் பெற்றது. உணவுப்பொருள்கள், மருந்து சாமான் கள், மாணவர்க்கு வேண்டிய பொருள் கள் ஆகியவற்றிற்கான கூட்டுறவுப்பண்ட

சாலைகள் பல்கிப்பெருகின. இவை உறுப்பினர்க்கு மட்டுமின்றி உறுப்பினரல்லாதார்க்கும் பொருள்களை விற்றன. இதனால் நாமறிவது கூட்டுறவு இயக்கம் மிக்க சக்திவாய்ந்ததும் வளர்ந்து வருவதுமான மாபெரும் இயக்கம் என்பதே.

முதலாளித்துவம் (Capitalism) இன்னாளில் பெரிதும் குறை கூறப்படுகின்றது. இதன் மிகப் பலவீனமான பாகம் இலாப வெறி (Profit Motive) யாகும். இவ்வெறியில் மதி மயங்கிய முதலாளிகள் பொருள்களை வாங்குவோரின் நலன்களை அவ்வளவாகக் கவனிப்பதில்லை. மட்டரகப் பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இந்த சமூக விரோதியான முதலாளித்துவத்தின் அழிவில் நாட்டங்கொண்டவர்கள் பொது உடைமை (Socialism) யைப் போதனை செய்தனர். ஆனால் பொது உடைமை, சமூகத்தில் ஒரு புரட்சியின்றி நடைபெறுதல் இயலாது. இத்தகைய நிலையில் கூட்டுறவு இயக்கம், முதலாளித்துவத்தின் குறைகளை நீக்குவதுடன் சமூக நலனையும் கருதுவதால் இது ஓர் ஒப்பற்ற கொள்கை என்று கூறுதல் மிகையல்ல.

இந்தியாவிலே 1904-ம் ஆண்டு முதல் பணஉதவிக்கும், பொருளுற்பத்தி, விநியோகம், மொத்த விற்பனை முதலியவற்றிற்காகப் பல கூட்டுறவுச்சங்கங்கள் தோன்றி வளர்ந்தன என்று முன்பே கூறப்பட்டது. குறைந்த காலத் தவணையில் கடன் கொடுக்கும் கூட்டுறவு பாங்குகளில் மாகாண பாங்குகள் பத்தும், மத்திய பாங்குகள் 589-ம், விவசாயக் கடன் சங்கங்கள் 110,635-ம் விவசாயத்தினைத் தவிர மற்றயவைகளுக்கான கடன் சங்கங்கள் 7093-ம் இருக்கின்றனவென்று 1942-43-ல் கணக்கிடப்

பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

கந்தகராஜ ரஸாயனம்

உறுதியான பலனைக் கொடுக்கிறது

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔஷதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்கு:

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்:

மானேஜர்,
ஆர்ய வைத்தியசாலை,
கோட்டைக்கல், தென் மலையாளம்

பட்டது. 1934-ல் ஏற்பட்ட தேசத்தின் மத்திய பாங்கான ரிசர்வ் பாங்கு (Reserve Bank of India) கூட்டுறவு பாங்குகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டது. விதை வாங்குதல், உரமிடல், கலப்பை முதலிய கருவிகள் வாங்குதல் ஆகிய வேலைகளுக்கு விவசாயிகள் குறைந்த காலத்தவணையில் கடன் வாங்குகின்றனர். பழைய கடன்களை கழிக்கவும், மாடுகள் வாங்கவும், நிலத்தில் நிரந்தரமான சில சீர்திருத்தங்களைச் செய்யவும் விவசாயிகள் நீண்ட காலத் தவணையில் கடன் வேண்டுகின்றனர். நிலத்தையே அடமானமாக வைத்து கடன்கள் "நில அடமான பாங்கு" களிலிருந்து (Land - Mortgage Banks) பெறப்படுகின்றன. இத்தகைய பாங்குகள் 271 இருப்பதாக 1943-ல் கணக்கிடப்பட்டது.

இவைகளைத் தவிர கூட்டுறவு பண்டசாலைகளும் நல்ல வளர்ச்சியடைந்துள்ளன. சிறப்பாக சென்னை மாகாணத்தில் இவற்றின் வளர்ச்சி குறிப்பிடத் தக்கது. சென்னையில் 1905-ல் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (T. U. C. S.) தோன்றியது. சென்னை மாகாணத்தில் மட்டும் 1330 ஆரம்பக்கூட்டுறவுப்பண்டசாலைகளும் 21 கூட்டுறவு மொத்த விற்பனை (Wholesale) பண்டசாலைகளும் இருப்பதாக 1946-ல் கணக்கிடப்பட்டது. அவ்வாண்டில் இவை செய்த மொத்த வியாபாரத்தின் மதிப்பு சுமார் ரூ. 25 கோடிக்குமேல் போகின்றது.

பொருளுற்பத்தியாளர்களுக்கான கூட்டுறவு சங்கங்களும் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளன. கூட்டுறவு முறையிலே பண்டங்களை விற்பதால் (Co-operative Marketing) பொருள்களை உற்பத்தி செய்வோருக்கு முயற்சிக்குத் தக்க கூலி கிடைக்கின்றது. பொருள்கள் விற்ற தொகையில் பெரும் பங்கு தயாரிப்பவரை சேருகின்றது என்பதை கலிபோர்னியா பழ வியாபாரிகள் சங்கமும் (California Fruit Growers' Exchange) ஏனைய இந்தியக் கூட்டுறவுச் சங்கங்களும் அனுபவத்தில் கண்டுள்ளன. பருத்தி, வேர்க்கடலை, உருளைக் கிழங்கு, பாக்கு, மிளகு, நெல் முதலிய பொருள்கள் தகுந்த விலைக்குக் கூட்டுறவு முறையிலே விற்பனைசெய்யப்படுகின்றன. பொருள்கள் திறமையுடன் ஒன்று திரட்டப்பட்டுப் பல ரகங்களாகப் பிரிவினை செய்யப்பட்டுச் சிறந்த முறையில் விற்கப் படுகின்றன. இதனால் பொருளுற்பத்தி செய்வோரும், பொருள்களை வாங்குவோரும் ஒருங்கே பயனடைகின்றனர். கரும்பு விற்பனைக்கான சங்கங்கள் வங்காளத்தில் சிறப்பாகப் பரவியுள்ளன. கல்கத்தா, லக்னோ, சென்னை போன்ற பெரிய நகரங்களில் கூட்டுறவு முறையில் பால் விற்பனை செய்யும் சங்கங்கள் நன்கு பரவி மாடுகளின் சொந்தக்காரருக்கும், பால் வாங்குவோருக்கும் ஒருங்கே பல நன்மைகளைச் செய்துள்ளன. துண்டுகளாக சிதறிப்போன விவசாய நிலங்களை ஒன்றுபடுத்துவதிலும் கூட்டுறவு இயக்கம் வெற்றிபெற்று வருகின்றது. கைத்தறி நெசவுத்தொழில் போன்ற தொழில்கள் வளரவும் தயாரித்த பொருள்களை நன்கு விற்கப்படவும் இவ்வியக்கம் உதவுகின்றது. வாழ்க்கைநிலை உயரவும், மக்களின் சமுதாய வாழ்வு மகிழ்ச்சியும், சிறப்பும் கொண்டதாக இருக்கவும், சொற்பச் செலவுசெய்து வைத்திய உதவி பெற்றுத் திடகாத்திரராய் வாழவும் இவ்வியக்கம் பாடுபடுகின்றது. இப்படி மக்களின் பொருளாதார, சமுதாய

வாழ்வில் இக்கூட்டுறவு இயக்கம் முன்னணியில் நின்று சிறந்த உதவியளிப்பதால் இது ஒரு பொதுமக்களின் இயக்கமே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கிராமங்கள் மிக்க இந்தியாவில், விவசாயிகளின் மகிழ்ச்சியே நாட்டின் மகிழ்ச்சி என்பது நன்கு உரணப்பட வேண்டும். கூட்டுறவும் நாட்டுயர்வும் ஒன்றையொன்று பற்றித் தழுவும் தகையன. மேலும் கூட்டுறவு ஓர் உயரிய பரந்த கொள்கை. சாதி, சமயம்போன்ற சிக்கல்கள் கூட்டுறவினைப் பாதிக்க முடியாது. ஏனெனில் இவ்வியக்கம், நட்பு, சமுதாய நலன் போன்ற உயரிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. நகரம், கிராமம், உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற வரையறையின்றி கூட்டுறவு இயக்கம் தனது தண்ணொளியை எங்கும் குறைவறப் பொழிகின்றது.

இந்தியாவில் இப்பொழுது என்றும் அனுபவித்திராததோர் உணவு நெருக்கடி இருந்துவருகின்றது. இதைச் சமாளிக்க உணவுப் பங்கீடு (Rationing) முறை நிலவி வருகின்றது. இது சீக்கிரம் எடுக்கப்பட்டுவிடும் என்று கூறப்படுகின்றது. இது எடுக்கப்பட்டால் உணவுப்பொருள்களைக் கூட்டுறவுப் பண்டசாலைகளினுதவியால் விற்கப்பட்டால் மக்கள் பெருநன்மை அடைவர். கூட்டுறவு இயக்கம் மேலும் மேலும் வளருவதால் பொதுமக்களின் வாழ்க்கைநிலை உயரும் ; மக்களின் வாழ்க்கைநிலை உயரின், நாட்டின் நிலை உயரும். எனவே கூட்டுறவே நாட்டுயர்வு !



நமது குடியரசு

'தராசு'

இருபதாம் நூற்றாண்டில் உலகமெங்கும் குடியரசைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறது. நாகரீகமில்லாது வாழ்ந்த காலத்திலிருந்து, நாகரிகத்தில் முதிர்ந்து சீர்திருந்திய வாழ்க்கையை நடத்தும் இக்காலம் வரையில், பற்பல அரசுகள் நம்நாட்டில் இருந்து வந்திருக்கின்றன என்ற விபரத்தை சரித்திரத்தின் மூலமறிந்துகொள்கிறோம். தர்மத்தையும், சத்யத்தையும் ஆதாரமாகக் கொண்ட ஆட்சியும் நமது நாட்டில் நடந்திருக்கிறது. கொடுங் கோன்மையான அரசு மிருந்திருக்கிறது. எம்மாதிரியான அரசு நடந்த காலத்திலும் மக்களும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் புலனாகிறது. மக்களுக்காகவே அரசு நடந்தது என்று கூறமுடியாவிட்டாலும் கூட, மக்களுடைய உரிமையை சரியாக உபயோகப்படுத்த முடியாத நிலையில் ஆட்சி நடந்ததினால்தான், பழைய ஆட்சி முறைகளில், வெறுப்புக்கொண்ட மக்கள் இன்று குடியரசை விரும்புகிறார்கள். அரசு, அரசன் முதலிய அம்சங்களுடன், மக்களுடைய வாழ்க்கையானது தொடங்காவிடினும், மக்கள் அரசை விரும்பி, அதற்குத் தலைவனாக அரசனை நியமித்துக் கொண்டு வாழவிரும்பினார்கள் என்று அறிய முடிவதினால், அரசு இல்லாமலிருந்த காலமும் ஒன்று இருந்திருக்கிறது என்பது தெளிவு. அரசும், அரசனுமில்லாமலிருந்த காலம் எப்படியிருந்திருக்க வேண்டும் என்பதைச் சரியாக யூகம் செய்து கொள்ள முடியாவிட்டாலும், அரசு, அரசன் முதலியவைகளுடனிருக்கும் இக்காலத்தில் அரசாங்கம் சரிவர நடைபெறு வண்ணம், சில இயக்கங்கள் நடைபெறும்போது, மக்கள் எவ்விதமான திகைப்பை யடைகிறார்களோ, அதைவிட பன்மடங்கு அச்சத்துடனும், திகைப்புடனும், மனிதர்கள் அக்காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொள்ள முடியும். சூழ்நிலை, கடமை, உரிமை முதலியவற்றை ஓரளவு அறிந்திருக்கும் இக்காலத்தில் கூட பயத்துடன்தான் வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து ஆட்சி, கூட்ட ஆட்சி, தலைவனாட்சி, அரசனாட்சி முதலியவைகளை அனுபவித்த பிறகுதான், அரசாங்கம் இனிக் குடியரசு முறையில் நடக்கவேண்டுமென்று மக்கள் விரும்புகின்றனர். குடியரசின் மேன்மையை உணர்ந்தது ஆங்கிலேயர்களின் ஆட்சிகாலத்தில்தான் என்று சிலர் கூறுகின்றனர். குடியரசுப் பற்றுக் கொண்ட ஒரு கூட்டம் ஏற்பட்டதற்கு காரணம் நாகரிகம் என்றும் கூறுகிறார்கள். நமது நாட்டைப் பொருத்தவரையில் இந்த எண்ணமானது தவறு என்று கூறமுடியும். நம் முன்னோர்களின் காலத்தில் நடந்த ஆட்சி குடியரசாகவேதானிருந்திருக்கிறது. அரசன் இருந்தாலுங் கூட மக்களுடைய விருப்பத்தின் படியேதான், அரசன், அரசுபுரிந்து வந்தான் என்ற விபரமும் நாம் அறிந்திருக்கிறோம். அரசனையும், அரசனுடைய கட்டளைகளையும் அறிய முடியாமல் வெகு தூரத்திலிருக்கும் கிராமங்கள், அக்கிராம மக்களாலேதான் ஆட்சிசெய்யப்பட்டு வந்திருக்கின்றன; இந்த ஆட்சி முறையைப் பற்றிக் கூறப்போனால், கூடுமான வரையில் கிராம மக்கள் தங்களுடைய தேவைகளையும், குறைகளையும் ஒரு அளவுக்குட்படுத்தி வாழ்ந்திருக்கிறார்கள். எந்த விதமான காரியத்திற்கும் அரசாங்கத்தின் உதவியையும், உத்தரவையும் எதிர்பார்த்தோ, அல்லது அரசனிடம் சென்றோ பூர்த்தி செய்து கொள்ளவில்லை என்பது உண்மை. இப்பொழுது சிறிய காரியத்திற்குக்கூட அரசாங்கத்தின் உதவியும், உத்தரவும்

BOOKS

BY

K. S. VENKATARAMANI

		Rs. As.
(Just Published) My Ashram Plan for Rural uplift	...1	8
Kandan, The Patriot (A Novel of New India in the Making) Second Edition	3	0
On the Sand-Dunes (Musings of Life in free Verse) Second Edition	1	0
The Indian Village (A Ten year Plan) Second Edition	0	12

SVETARANYA ASHRAMA

MYLAPORE :: :: MADRAS

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்.

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச் சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள் !

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்

கும்பகோணம் கிளை :—	திருச்சி கிளை :—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.	15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு

தேவையாகிவிட்டது. இந்த முறைதான் மக்களுடைய வளர்ச்சியைத் தடை செய்தது என்று கூறினல் மிகையாகாது. மக்களை அடக்கியாள வேண்டுமென்ற மனேபாவம் அக்காலத்திலில்லை. இதனல் தான் அதிகமான சட்டதிட்டங்கள் அக்காலத்தில் ஏற்படவில்லை. சட்டங்கள் இக்காலத்தில் அதிகமாகி விட்டதனல், மக்களின் சுய நிர்ணய உரிமையை இழக்க நேர்ந்தது. சுயநிர்ணய உரிமையையும், ஜீவாதார உரிமையையும் கூட இக்காலத்தில் அரசின் உதவியால்தான் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது.

நாகரிகமில்லாதிருந்த மக்கள் கடமை, உரிமை போன்றவைகளை அக்காலத்தில் சரியாக உணராவிட்டாலும் 'மனிதத் தன்மை' யென்ற ஒரே குணம் அக்கால மக்களிடத்தில் நிரம்பியிருந்ததினல் இன்றைய் நிலமையைவிட மேன்மையாகவே வாழ்ந்தார்கள். இதனல் தான் நமது நாட்டில் குடியரசு முன்காலத்திலேயே இருந்திருக்கிறது என்று கூறமுடிகிறது. நமது நாட்டிற்கு வந்த வெளிநாட்டு யாத்ரீகர்களும், வியாபாரிகளும், அவர்கள் எழுதியிருக்கும் குறிப்புகளினலும் சில அறிய நூல்களினலும், நம்முடைய குடியரசு முறையை இன்று அறிய இயலுகிறது. உலகிலேயே சிறந்து விளங்கிய மஸ்லின்களையும், அழியாத ஜீவசித்திரங்களையும், உலகம் போற்றும் கலைகளையுடையவர்களாயும் நாம் வாழ்ந்து வந்தோம் என்பது மட்டும் உறுதி. ஒரு குறுகிய காலத்திற்குள்தான் நமது நாகரீகமானது எவ்விதமாகவோ அழிக்கப்பட்டு விட்டது. என்று கூறமுடியும். குடியரசைப் பற்றிய எண்ணம் மேனுடுகளில் பதினெட்டாம் நூற்றுண்டுக்கு முன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமேயே நாம் குடியரசில் தான் வாழ்ந்திருக்கிறேம். கௌடில்யர் எழுதியிருக்கும் அர்த்த சாஸ்திரத்தில் நமது நாட்டு ஆட்சி முறையைப் பற்றி விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. முன்காலத்தில் குரு குலம் என்ற பள்ளியில் ஆட்சிமுறையும் அர்த்த சாஸ்திரமும், தன நூலும், ஜாதிவித்திபாசமின்றிக் கற்றுக்கொடுக்கப்பட்டதாக அறிகிறேம். அரசகுமாரர்கள் இம்மாதிரியான குருகுலத்தில் பயில வேண்டியதை இன்றியமையாததாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. கௌடில்யரின் அர்த்த சாத்திரம் தத்துவத்தை கொண்டாக இருந்த போதிலும், அதன்தத்துவத்தை மனு, யஞ்ஞவல்கியர், கமந்தகன், சோமதேவன், நீலகண்டன் முதலியோர் நன்கு புரிந்து கொள்ளும்படி அரசியல் நூலை எழுதியிருக்கிறுர்கள். அர்த்த சாஸ்திரத்தை அரச முறையில் நன்கு பயன் படுத்தியவர் ராம்தாஸ், அக்பர், சிவாஜி, பேஷ்வாக்கள் போன்றவர்கள் என்றும் அறிய முடிகிறது. கிறிஸ்தவ, மகம்மதிய மதங்களின் அடிப்படைத் தத்துவங்கள் பூராவும் நமது பழைய குடியரசு முறையில் அடங்கி யிருக்கிறது.

எந்த நாட்டின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தாலும், மனித வாழ்க்கையின் ஆரம்பத்தில் அரசு, அரசன் முதலிய உறுபுகள் இல்லை என்பது உறுதி. காலச் சக்கரமானது சுழலும்போது, மனிதர்களின் மனநிலையும் மாறிப் பேராசை, பொருமை முதலிய கெட்ட குணங்கள் ஏற்பட்டு ஒருவனிடம் மற்றவன் சண்டையிடவே குற்றத்துக்குத் தக்க தண்டனையைக் கொடுக்கும் காலம் ஏற்பட்டது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் நியாய பரிபாலனத்தின் பொருட்டே அரசன் ஏற்படுத்தப் பட்டான். மக்கள் அரசனுடைய கட்டளைப்படி நடக்கத் தயாரானுர்கள். இதனல் அரசனின் ஆட்சியானது நிலையாய்விட்டது. குடிகளின் மனம் கோணுது அரசு நடத்துவதே அரசனின் கடமை. மறையவர் முதல் பறையர் வரையில் அரசனின் ஆட்சியிலிருக்கும் குற்றம் குறைகளை வெளிப்படையாகக் கூற உரிமை யிருந்தது. மக்கள் ஒன்றுக்கூடித்தான் அரசனைத் தேர்ந்தெடுப்பார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவன் மகுடமணிந்து மக்களின் ஒத்துழைப்புடன், நாட்டைப் பரிபாலிப்பது பண்டைய குடியரசு முறை. திருக்குறள் முதலிய தமிழ் நூல்களும், வடமொழி நூல்

களும் நாடு, அரசன், அமைச்சன், அரண், படை, படைத்தலைவன், முதலியோர்களும், அவர்களுடைய யோக்கியதைகளும் பொறுப்புகளும் வரையறுக்கப்பட்டிருப்பதை ஊன்றிக் கவனித்தால் நமது குடியரசின் மேன்மைத் துலங்கும்.

நாட்டிற்கு அரசனிருந்த போதிலும், ஆட்சியை நடத்த ஒருசபை இருந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த சபைக்கு மந்திரசபை என்று பெயர். ராமாயணம், மஹாபாரதம் முதலிய நூல்களில் ஆட்சியானது மந்திரசபையின் கருத்துப்படியேதான் நடந்ததாகக் கூறுகிறது. மந்திரசபையில் ஒரு வகுப்பார்தா னிருக்கலாம் என்று கூறப்படவில்லை. உயர் குலத்தவர்கள் எந்தத் திறமையின் கீழ் மந்திர சபைக்கு அழைக்கப் படுகிறார்களோ, அதே முறையில் எல்லா ஜாதிகளிலிருந்தும் அழைக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும் கூறமுடியும். பண்டைய மந்திர சபையின் உயர்வைப் பற்றி, மகாபாரதம், சாந்தி பர்வத்தில் ஒரு மந்திர சபையின் அமைப்பைப் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. க்ஷத்திரியர்கள் 8 பேர், அந்தணர்-2, வைசியர்-21, சூத்திரர்கள்-3 என்ற கணக்குப்படி மந்திர சபையில் அங்கத்தினர்கள் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமாக அமைந்த சபைமட்டும் ஆட்சி செய்யும் என்றும் கூறப்படவில்லை. இந்த சபைக்குதவியாகப் பல சபைகள் இருக்கும். நீதியும், சத்யமும் எல்லாவற்றிலும் ஆற்றலுடையவர் களுமுள்ள இந்த சபையிலிருந்து ஒருவர் தலைவராக ஏற்படுத்தப்பட்டு, மக்களின் போக்குப்படி ஜாதி, மத வித்தியாசமின்றி வேலைகளை செய்ய வேண்டும் என்று அறிவிக்கிறது. அங்கத்தினர்கள் எல்லா விஷயங்களையும் மக்களிடத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்தப் பட்டிருக்கிறது.

நூறு வருஷங்களுக்கு முன்புகூட இம்மாதிரியான முறையில் சில இடங்கள் இருந்திருக்கின்றன. விசாரணைக்கும், ஆலோசனைக்கும் கூடுமிடத்தை 'அம்பலம்' என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வளவு மேன்மையான முறையிலும், ஜனநாயக ரீதியிலும் நாம் நடந்து வந்திருப்பதால், குடியரசின் தன்மையைப் பற்றி இன்று நன்றாக நாம் அறிய முடிகிறது. நாம் விரும்பும் குடியரசை எப்படி நடத்த வேண்டுமென்று நமக்கு நன்றாகத் தெரியும். புதிய முறையில் அமைக்கப்படும் குடியரசுக்கும், பழைய முறைக்கும் ஒரே வித்தியாசம் தானிருக்க முடியும். அதாவது ஒரு கட்சியின் சார்பாகக் குடியரசை அமைக்கும் தற்கால முறைக்கும், மக்களின் விருப்பப்படி அமைக்கப்பட்ட பழையகால முறையில் தான் வித்யாசம். ஒரு கட்சிமுறை அக்காலத்திலில்லை. கட்சி முறையானது நாட்டிற்கு ஓரளவுதான் நன்மை செய்ய முடியும் என்பது திண்ணம். கட்சிப் பற்றற்ற முறையில் அமைக்கப்படும் குடியரசுதான் நிலைத்து நிற்கும். சில வருஷங்களாகவே இம் முறையை மக்கள் உணருவதை விட, தலைவர்கள் நன்கு உணர்ந்திருக் கிறார்கள். உணர்ந்ததை, செயலில் காட்ட முடியாமல் இந்நிலை சதி செய்கிறது.

பதவிக்குத் தனி மதிப்புதான் இச் சதியின் ஆதாரம். இம்மதிப்பும், பதவி மோகமும் நம்மை விட்டகலச் சிறிது காலம் பிடிக்கும், அக்காலத்திற்குள் மக்களும் குடியரசு முறைகளை நன்குணர வேண்டும், அப்பொழுதுதான் சரியான குடியரசு ஏற்படும். இந்த ஆக்க வேலைக்கு நாம் தயாராக வேண்டும்.

‘நிலம் சுரக்கும் நிறைவளம்’

[இக்கட்டுரை திரு. எம். எஸ். ராண்டவா ஐ.ஸி.எஸ். (M.S. Randhawa, I. C. S.) என்ற அறிஞர் (Indian Farming) என்ற பத்திரிகையில் எழுதியுள்ள ஓர் அருமையான பொருள் நிரம்பிய கட்டுரையைப் பெரும்பாலும் தழுவியது. ஆங்கிலக் கட்டுரையாளர் பரந்த அனுபவமும் ஆழ்ந்தகன்ற நுண்ணறிவும் வாய்ந்தவர். பாரதமணி வாசகர்களுக்கு இது தெரிய வேண்டியது மிகவும் அவசியமாகும் என்ற நோக்கத்துடனேயே அதன் முக்கியமான பகுதிகளைத் தமிழில் வெளியிட்டிருக்கிறது. அ. இ.]

பூமிதேவி நமக்கெல்லாம் தாய். நாம் விவேகமாக நடந்துகொண்டால் நம்மையெல்லாம் ஊட்டி வளர்க்கக் காத்திருக்கிறள் நமது தாய். அங்குமிங்கும் வளர்ந்துகொண்டிருந்த காட்டுச் செடிகளிலிருந்து நம் முன்னோர் விதைகளைச் சேகரித்து உணவுக்காகப் பயிர் செய்யத் தொடங்கினர்கள். நீண்ட காலமாய்க் கஷ்டப்பட்டு நெற்பயிரையும் வேறு தானியப் பயிர்களையும் பேணி வளர்த்துத் தங்கள் உணவு வசதிகளைத் தேடிக் கொண்டிருக்க வேண்டும். கனி தரும் மரங்களையும் நாளடைவில் பயன் படுத்திக்கொண்டார்கள்.

பயிர் பச்சைகளின் யாத்திரை

காட்டுப் பிராணிகளாயிருந்த மாடுகளைப் பழக்கி வசமாக்கியபின் நமது நாட்டில் விவசாயம் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பல பிரதேசங்களிலிருந்து பயிர் பச்சைகளைத் தேடிப் பிடித்து வசதியுள்ள இடங்களில் எல்லாம் பயிர் செய்து மரக்கறி, இலைக்கறி (கீரை வகைகள்) முதலியவற்றைப் பெருக்கிக்கொண்டும் பசு, எருமை, ஆடு முதலிய மிருகங்களிலிருந்து கிடைத்த பால் தயிர் வெண்ணெய் முதலியவற்றை உட்கொண்டும் சுகவாழ்வு வாழ்ந்தார்கள்.

அன்னியப் பிரதேசங்களிலிருந்தும் நாம் உணவு தரும் பயிர்களையும் மரங்களையும் நமது நாட்டிலே கொண்டு வந்து வளர்த்துப் பயன் பெற்றிருக்கிறோம் என்றால், சில வாசகர்களுக்கு அதிசயமாய்த் தோன்றலாம். எனினும் இது உண்மை. உதாரணமாக, மிளகாய் இடையிலே வந்து சேர்ந்தசரக்குத்தான். மிளகு தான் நம் முன்னோர் அறிந்தது, பயிர் செய்தது. மிளகுக்காகவே அன்னியர்கள் நமது நாட்டில் வியாபாரம் செய்ய வந்தார்கள்; படையெடுத்தும் வந்தார்கள். மிளகுக்கொடி நமது சரித்திரத்தையே உருவாக்கியிருக்கிறது.

எவ்வளவோ பிரியமாகச் சாப்பிடுகிறோமே உருளைக்கிழங்கு, இது நம் முன்னோருக்குத் தெரியாத உணவுப்பொருள். பதினேழாம் நூற்றாண்டுக்கு முன் இது நம்நாட்டில் இருந்ததில்லை. தென் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பா வழியாக யாத்திரை செய்து நம் நாட்டில் குடியேறிய உணவுப்பொருள் இது. ஸோயாபீன் என்ற சினமொச்சை மஞ்சூரியாவிலிருந்து வந்தது. பட்டாணிக்கடலை பேரு என்ற பிரதேசத்திலிருந்து போர்ச்சுகீஸியரால் கொண்டுவரப்பட்டது.

தோட்டச் செடிகளில் பலவும், அலங்காரப் பூமரங்களில் பல தினசுகளும் அன்னிய நாடுகளிலிருந்து பிரிட்டிஷ் யாத்திரிகர்களாலும் உத்தியோகஸ்தர்களாலும் கொண்டு சேர்க்கப் பட்டவை தான். புஷ்ப ராணியான ரோஜாவே நமக்குச் சொந்தம் இல்லை. இரத்த வர்ணமான ஆரஞ்சுப் பழம் மால்டா என்ற பிரதேசத்திலிருந்து வந்து சேர்ந்தது. விதையில்லாத ஆரஞ்சு ப்ரேஸில் என்ற இடத்திலிருந்து வந்தது.

அமெரிக்காவும் உணவு வளமும்

இப்படியே அன்னியர்களும் நமது நாட்டுச் செடிகளையும் மரங்களையும் கொண்டு போய்த் தாங்கள் வளர்த்துப் பயனடைந்திருக்கிறார்கள். உதாரணமாக நமது மாமரம் இப்போது ப்ளாரிடா என்ற இடத்தில் அமெரிக்கர்களால் பயிர் செய்யப்படுகிறது. அமெரிக்கத் தாவரசாஸ்திரிகள் நமது ஆசியாக் கண்டத்திலும் வட ஆப்பிரிக்காவிலும் உள்ள செடி, கொடி மரங்களைத் தங்கள் நாட்டிலும் பயிர் செய்து தங்கள் உணவுப் பொருளாதார நிலையை மேம்படுத்தியிருக்கிறார்கள். ஒரு காலத்திலே அமெரிக்காவில் சிற் சில பழவகைகளும், சோளம், உருளைக்கிழங்கு, தக்காளி ஆகிய உணவு வகைகளுந்தான் காணப்பட்டன. இன்றோ எத்தனையோ தினுசுகள் வெளி நாடுகளிலிருந்து அங்கே குடியேறி விட்டன. இதற்காக அமெரிக்க சர்க்காரின் விவசாய இலாகா 1903-ம் ஆண்டு முதல் ஒரு விசேஷ முயற்சியை மேற்கொண்டு பகீரதப் பிரயத்தனம் செய்து அமெரிக்கரின் உணவு வளத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது.

அறுபது நாளில் பலன் தரக்கூடியதும், எட்டங்குலம் மழை பெய்பக்கூடிய சீதோஷ்ணப் பிரதேசத்திற்கு ஏற்றதுமாகிய ஒரு வகைத் தானியப் பயிரை அமெரிக்கா ஸைபீரியாவிலிருந்து கொண்டு வந்து பயன் பெற்றிருக்கிறது. இப்பயிர் நமது தேசத்திற்கும் பயன் பெறும்; பாக்கிஸ்தான் பிரதேசமான ஸிந்துவிலும் இந்துஸ்தானத்தைச் சேர்ந்த ராஜபுதனத்திலும் பயிர் செய்து கொள்ளலாம்.

அமெரிக்கர்கள் பேரீச்சையின் பல தினுசுகளை ஏராளமாய்ப் பயிர் செய்து வருகிறார்கள். பேரீச்சையில் உணவுச் சத்து அதிகம். நமது தேசத்திலும் பஞ்சாப், சிந்து, ராஜபுதனம் முதலான பிரதேசங்களிலும் ஏராளமாய்ப் பல தினுசுகளையும் பயிர் செய்து கொள்ளலாம். இன்றைய இந்தியாவில் பேரீச்சையின் சில தினுசுகளே பயிர் செய்யப்படுகின்றன. இப்பயிர் வளத்தை மேலும் மேலும் பெருக்கி நமது உணவு வளத்தையும் உடல் வளத்தையும் பேணாததற்கு நமது அறியாமையும் சோம்பேரித்தனமுமே காரணமாகும்.

நமது வசதிகள்

போக்கு வரவு வசதிகள் அதிகரித்ததும் உலகத்தின் பல பகுதிகளில் பயிர் வகைகளும் போக்கு வரவு செய்யத் தொடங்கிவிட்டன. எனினும் இந்தியர்களாகிய நாம் இவ் வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு நமது உணவுப் பொருள்களைத் தக்க முறையில் இன்னும் அபிவிருத்தி செய்து கொள்ளவில்லை. நமது நாட்டின் பல பிரதேசங்களில் சீதோஷ்ண நிலை பலவிதமாகக் காணப்படுவதால் நமது உணவுப் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்துகொள்வது எளிது. சீதோஷ்ண நிலை போல் நில வளமும் பலவகையாக நமது நாட்டில் காணப்படுகின்றது. இதனால் நமது தேசத்தை ஒரு குட்டி உலகம் எனலாம். உலக உணவு வகைகள் பலவும் இங்கே பயிராகக்கூடும். அதிசீதமான வட துருவப் பிரதேசம் முதல் அதி உஷ்ணமான பிரதேசம் வரையில் பயிராகும் நல்லுணவு வகைகளை நாம் பயிர்செய்து பயன் பெறுவதற்கு நமது பூமி சாஸ்திர நிலை இடம் கொடுப்பதால் நாம் இந்த விஷயத்தில் அதிருஷ்டசாலிகள் தான்.

இமயமலைப் பிரதேசங்களிலும் நம் தென்னிந்தியாவிலுள்ள மலைப் பிரதேசங்களிலும் ஒழுங்காகச் சோதனைகள் செய்து பார்த்தால் பழ வகைகளை நாம் பெருக்கிக்கொள்ள முடியும்.

இந்தப் பிரதேசங்கள் இன்று வரையில் சோதிக்கப் பெறாதது நாம் பிற்கால நாகரிகத்தின் விஞ்ஞான மனப் பான்மையை இன்னும் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதற்குத் தான் சான்றாகும். இப் பிரதேசங்களோடு ஆப்கானிஸ்தானம், ஜாவா, மலேயா முதலான, இந்தியாவுடன் நெடுங்காலம் தொடர்பு கொண்டிருந்த, வெளிநாடுகே

ளுக்கும் சோதனைப்படைகள் அனுப்பிப் புதிய புதிய பழவகைகளையும் வேறு உணவுப் பதார்த்தங்களையும் கண்டு நமது நாட்டுக்குக் கொண்டுவந்து பயன் படுத்திக் கொள்ளலாம். இத்தகைய சோதனைப் படைகளைச் சீனா, இரான், இராக் ஆகிய ஆசிய நாடுகளுக்கும், ஆப்ரிக்காக் கண்டத்திற்கும் மத்திய-தென் அமெரிக்காவுக்கும் அனுப்பிப் பயன் பெறலாம். ஆப்கானிஸ்தான், இரான், இராக் மேற்குத் துருக்கி முதலான நாடுகளில் பாதாம் பருப்புப் போன்ற சில புதிய பருப்பு வகைகள் கிடைக்கக்கூடும்.

ஹிந்துகுஷ் என்ற இமாலய எல்லைப் பிரதேசம் சில முக்கியமான பயிர்வகைகளுக்கு இல்லமாய் இருந்திருக்கிறது. அங்கே செய்யும் சோதனைகளால், பயிர் பச்சைகளை நோய்களிலிருந்தும் கடும் பனியிலிருந்தும் காப்பதற்கு உபாயங்களைக் கண்டுகொள்ள இயலும். இத்தகைய பல பிரதேசங்களில் எதிர்கால உணவுப் பயிர்களின் முன்னோர்களான சில காட்டு ஜாதிகளைக் கண்டுபிடிக்கவும் இயலும்.

சீனாவும் நாமும்

சீனாவிலிருந்து நமக்கு அவரை, சிவப்பு முள்ளங்கி போன்ற பலவேறு காய்கறித் தினுசுகள் கிடைக்கக்கூடும். அவற்றின் விதைகளைக் கொண்டு நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியது அவசியமாகும். வெள்ளங்களும் பஞ்சங்களும் அடிக்கடி ஏற்பட்டு உணவுப் பயிர்களைச் சீனாவில் பாழாக்கி விடுவதுண்டு; அதனால் களைகள் என்று தள்ளிவிடக் கூடிய பல செடி பூண்டுகளிலிருந்து உணவுச் சத்துள்ளவற்றைக் கண்டு பிடித்துச் சீனர்கள் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவற்றுள் ஒன்று லோஹான் குயோ (Lohan Keo) ஒரு மாகாணத்தின் மலைப்பிரதேசத்தில் பயிர் செய்யப்பெற்று ஊறுகாயாக உதவுவதுடன், தொண்டைப் புண்ணுக்கும் உட்குடல்-கோளாறுகளுக்கும் மருந்தாகவும் பயன் படுகிறது.

சீனாவில் பல்லாண்டுகளாக உணவுச் சோதனைகள் நடத்திப்பார்த்த ஸ்விங்கிள் (Swingle) என்பவர், உணவுச் சத்தோடு மருந்துச் சத்தும் நறுஞ்சுவையுமுள்ள உணவுப் பொருள்களைக் கண்டு பிடித்துக் கலிபோர்னியாவில் பயிர் செய்து பயன் படுத்திக் கொண்டிருக்கிறார். அமெரிக்கர்கள் இவ்வளவு ஜாக்கிரதையாக உணவுச் சோதனைகள் செய்துவந்த போதிலும் சீனர்களின் உணவுச் செடி பூண்டு வகைகளில் நூற்றுக்குப் பத்து விழுக்காடு தான் இது வரையில் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள்.

இந்தியர்களாகிய நாமும் இத்தகைய சோதனைகள் நடத்திப் பயன்பெற முயல வேண்டும். ஆரஞ்சுப் பழத்தின் தாயகமான தெற்குச் சீனாவில், முக்கியமாகச் சோதனைகள் செய்து பார்த்து, சீனர்களின் சில ஆரஞ்சு வகைகளையும் இந்தியாவில் பயிர் செய்யவேண்டும்.

சோதனைகளும் காட்டுச்செடிகளும்

உணவுச் சோதனைகளால், கடுங்குளிரையும் சமாளித்துக் கொண்டு விரைவில் முதிர்ந்து பலன்தரும் கோதுமையையும் ஸைபீரியாவில் பயிர்செய்யக் கற்றுக் கொண்டிருந்ததால் தான், நாஜிப் படைகள் இந்த இரண்டாவது உலக யுத்தத்தில் யுக்ரேனைப் (Ukrain) பிடித்திருந்த காலத்திலும், ரஷ்யர்கள் உணவுப் பஞ்சத்திற்கு அஞ்சிப் பணிந்து போகாமல் ஸைபீரியாவைத் தங்கள் 'ரொட்டிக் கூடை'யாக உபயோகித்துக் கொண்டு எதிரிகளை எதிர்த்துச் சமாளிக்க முடிந்தது. நோய்களையும் கடுங்குளிரையும் எதிர்த்துப் பிழைத்திருக்கக் கூடிய உணவுப் பயிர்வகைகளை ரஷ்யர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

காட்டுச் செடிகளையும், 'காட்டுச் செடிகள்தானே' என்று அலட்சியம் செய்துவிடக் கூடாது. காட்டு மனிதர் கல்வி, பழக்கம் முதலிய காரணங்களால் நாட்டு மக்கள் ஆவதுபோல், காட்டுச் செடிகளும் நாட்டாருக்குப் பயன்படும் உணவுச் செடிகள் ஆகக்கூடும். காட்-

டிலே வளர்ந்ததில் அச்செடிகளுக்கு நோய், குளிர், தண்ணீர்ப் பஞ்சம் முதலியவற்றுக்கு அஞ்சாது எதிர்த்துப் பிழைத்து நிற்கும் ஆற்றல் கிடைத்திருக்கிறது. இந்த எதிர்ப்புச் சக்தியையும் நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தியாவிலுள்ள ஒருவகைக் காட்டுக் கரும்பை ஜாவாவில் பயிர்செய்து அத்தீவின் சர்க்கரை வியாபாரத்திற்குப் புத்துயிர் அளித்திருக்கிறார்கள். கோயம்புத்தூரில் பிரசித்தமாகப் பயிராகும் கரும்பு இனம், நாட்டுக்கரும்பை ஒரு வகைக் காட்டுக் கரும்புடன் ஒட்ட வைத்த கலப்பு மணத்தின் சந்ததிதான்! ஒருவகைக் காட்டுப்புல்லை உபயோகித்துச் சில கோதுமை வகைகளை ரஷ்யாவில் பயிர்செய்கிறார்கள். இக்கோதுமையினம் சீதோஷ்ண நிலைமைகளால் பாதிக்கப்படாது புதிய புதிய பிரதேசங்களிலும் பயிராகக் கூடியது என்கிறார்கள். நமது நெல்லே ஆதியில் ஒருவகைக் காட்டுப் புல்லிலிருந்து பரிணமித்தது தான் என்று கருதலாம்.

பருத்தி இனங்களில் இத்தகைய ஆராய்ச்சிகள் நடைபெற்றுப் பயனளித்திருக்கின்றன. நாட்டுச் செடியும் காட்டுச் செடியும் ஒட்டிக் கலந்து பூச்சிகளால் சேதம் அடையாத ஒருவகைப் பருத்திச் செடியாகப் பரிணமித்திருக்கிறது. உருளைக் கிழங்கும் இத்தகைய சோதனைகளால் குளிரையும் நோயையும் எதிர்த்துச் சமாளிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறது.

அரசாங்கத்தின் பொறுப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாத்ரிகர்களும், 'புதுமை காணவேண்டும்' என்ற நோக்கமுள்ள நாடோடிகளும், உலகத்தின் உணவு வளத்தைப் பெருக்குவதற்கு எவ்வளவோ உதவி செய்தனர். எனினும் உணவுச் சோதனைகளை எத்தகைய ஆற்றல் வாய்ந்த தனி மனிதர்களுக்கு இனி விட்டு விடலாகாது. ஒழுங்கான திட்டத்துடன் கட்டுப்பாடாக வேலைசெய்து மக்களின் உணவுச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்வது இன்றியமையாதது.

அமெரிக்காவை முன் மாதிரியாகக் கொண்டு நமது தாவரச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதற்குத் தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்று 1942 பிப்ரவரியில் கூடிய விவசாய இலாகாவைச் சார்ந்த ஒரு பகுதியினர் தங்கள் கூட்டத்திலே தீர்மானம் செய்தார்கள். இத்தகைய ஏற்பாடுகளால் நமது விவசாயம், தேசப் பொருளாதார வளர்ச்சியில் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு விசேஷ அபிவிருத்தி அடையக் கூடும்.

தாவரச் செல்வத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல், பெருக்கிக் கொள்ளாமல் தேசம் வாணிபத்துறையில் முன்னேறுவதால் மட்டும் விசேஷ நற்பயன் விளைந்துவிடப் போவதில்லை. செல்வத்தின் அதி முக்கியமான பகுதி உணவுச் செல்வம் தான். நிலப்பரப்பில் எங்கெங்கே பயிர்செய்ய முடியுமோ அங்கங்கே ஏற்ற பயிர் வகைகளை வளர்க்க முயலவேண்டும். நோய்களையும் சீதோஷ்ண நிலைகளையும் சமாளித்துக்கொண்டு நமது உணவுச் செல்வம் பெருகிக் கொண்டே போகவேண்டும். இத்துறையில் உலகத்திலே அமெரிக்கா முன்னின்று பல பயன் அளிக்கும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இத்துறையில் உழைத்துவரும் அமெரிக்கத் தாவர சாஸ்திரிகள் பலவேறு நாடுகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு இந்தியாவுக்கும் விரைவில் வருவார்கள் என்று தெரிகிறது. நமது அரசாங்கம் இனியாவது இத்துறையில் தக்க கவனம் செலுத்திக் காரியசித்தி பெறவேண்டும்.

நமது நாட்டிலுள்ள நிலவளங்களும் சீதோஷ்ண நிலைமைகளும் ஏற்கெனவேயுள்ள பயிர்பச்சை வகைகளும் புதிய பரிசீலனைகளுக்கும் காரியசித்திக்கும் அடிப்படையில் பெருந்துணையாக அமையக்கூடும். விரைவில் நமது காட்டுச் செடிவகைகளைப் பரிசீலனை செய்து பயன்படுத்திக் கொள்ள முயலவேண்டும்.

சிறுகதை

தந்தையும் மகனும்

கு. நாராயணஸ்வாமி

பிரளய கால ருத்ரனைப் பற்றி வர்ணிக்கிறார்கள் அல்லவா ? சாக்ஷாத் பிரளய கால ருத்ரனாகவே ஒருவர் இப் புவியில் சிறிதுநேரம் காட்சியளித்தார். 1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதி மருதூரில் இருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குள் காலை 8 மணிக்குச் சென்றிருந்தால் பிரளயகால ருத்ரனின் தோற்றத்தைக் கண்டிருக்கலாம் ; அதாவது அவர் ‘ இது மாதிரி ’தான் இருந்திருக்கவேண்டும் என்று ஒருவாறு ஊகித்திருக்கலாம்.

வேறு ஒருவரையும் சொல்லவில்லை ; சப்இன்ஸ்பெக்டர் பொன்னையாப் பிள்ளையைத்தான் குறிப்பிடுகிறேன். போலீஸ் ஸ்டேஷனில் அந்நேரத்தில் அவர் அவ்விதம் தான் காட்சியளித்தார். நிமிஷத்திற்கு நிமிஷம் அவருடைய கோபம் வளர்வதைக் காண்பிக்க நிமிஷத்திற்கு நிமிஷம் அவர் நடையின் வேகமும் அதிகரித்தது. அந்த அறையில் அவர் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தால் ஏதோ நடந்திருக்கவேண்டும் என்று தோன்றியது. அறை அதிக நீளமில்லாததால் அடிக்கடி சுவரில் முட்டிக்கொள்வதிலிருந்து அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. நல்ல வேளை, அவர் சுவரில் முட்டிக்கொள்ளாமல் இருந்ததால் தான் அவ்வூர்ச் சிறுவர்கள் அன்று எலும்பு முறிந்தோடு தப்பினார்கள். அவர் அடிக்கடி தலையில் ஓங்கி அடித்துக்கொண்டார், கையையும் தலையையும் வலித்ததே தவிர வேறு பிரயோஜனம் ஏற்படவில்லை. பிறகு அங்கிருந்த சாமான்கள் ஒவ்வொன்றின்மீதும் தன் பலத்தைச் சோதித்தார். குப்பைக் காகிதங்கள் போட வைத்திருந்த கூடைக்கு இரண்டு உதை கிடைத்ததும் அது சாய்ந்து சரணாகதி யடைந்துவிட்டது. மேஜை ஒன்றுதான் தீரமாக அடிகளை வாங்கிக் கொண்டு அஹிம்சையைக் கடைப்பிடித்தது. நடுவில் அவரைத் தடுக்க முயன்ற நாற்காலி அவர் பிடியில் அகப்பட்டுக் கொண்டு ஒரு நிமிஷம் நடுங்கியது.

அவர் கோபம் உச்சத்திற்குப் போய் விட்டுக் கீழே இறங்கும் சமயத்தில் அந்த அறையில் ஏழெட்டுப் போலீஸ்காரர்கள் நுழைந்தார்கள். எஜமானின் கோபத்தைக் கண்டதும் அவர்களுக்கு நடுக்கம் உண்டாயிற்று.

“ தடியன்களா !” என்று அவர்களை வாயாற வரவேற்று நிறுத்தினார் ‘ எஜமான் ’. சிறிதுநேரம் கழித்துத்தான் அவரால் பேச முடிந்தது. “ உங்களுக்கு புத்தி இருக்கா ? அதுதான் இல்லேன்னு, சூடு, சொரணைகூடவா இல்லை ? எங்கேடா எல்லாத்தையும் அடகு வச்சுட்டீங்க ? நீங்கள்ளெல்லாரும்

புதிய உணவுப்பயிர்களைக் குடியேற்றி வளர்ப்பதற்கும் இந்தியாவின் மலைப் பிரதேசங்களும் காட்டுப் பக்கங்களும் நாட்டுப்புறங்களும் வசதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

புதிய புதிய சோதனைகளின் பயனாக நமது பயிர் வளம்பெருகும்போது, நிலம் என்ற காமதேனு பால் சுரந்து மக்களை ஊட்டி வளர்க்கும்.

‘நிலம் சுரக்கும் நிறைவளம்’

என்று கம்பன் வருணிக்கிறானே அந்த ராமராஜ்யம் நமதுநாட்டில் நிலைபெறுவதற்கு அஸ்திவாரம் ஏற்படும்.

போலீஸ்காரங்களா ? தொப்பி, பூட்ஸ் எல்லாத்தையும் தூர எறிந்துட்டுக் கூலி வேலைக்குப் போங்கடா !"

" எஜமான் " என்று ஒருவன் மரியாதையாக அழைத்து ஏதோ சொல்ல முயன்றான்,

" சட். உங்க பதிலெல்லாம் எனக்கு வேண்டாம். நீங்க நேத்திக்கு நடந்து கொண்டது ஒண்ணே போதுமே. வாண்டுப் பசங்கள் நம்ம கௌரவத்தையெல்லாம் பறக்க அடிச்சுட்டாங்களே ? 'ஆ'ன்னு வாயைப் பொளந்து பார்த்துக் கொண்டு இருந்தீங்களாக்கும் ! பள்ளிக்கூடத்தைவிட்டுப் பசங்கள் ஊர்வலம் போனாங்களாம். அதை வேடிக்கைப் பார்த்தீங்களாக்கும்? உங்களுக்குப் போய் போலீஸ் வேலை கொடுத்தாங்களே ! நாளைக்கு மேலேயிருந்து கேள்வி வந்தா என்ன பதில் சொல்றது ? இந்த ஊர் போலீஸ்காரங்க ஊர்வலத்தை வேடிக்கை பார்க்கப் போய்ட்டாங்கன்னு சொல்லட்டுமா ? தூ !" என்று எரிந்து விழுந்த இன்ஸ்பெக்டர் மனதிலிருந்த கோபத்தையும் ஆத்திரத்தையும் சிறிதளவு பேச்சினால் வெளியில் கொட்டி விட்டதால் சற்றே சாந்தமானார். ஒரு குவளை பானை ஜலம் சாப்பிட்டதால் இன்னும் கொஞ்சம் கோபம் அடங்கிற்று.

'அதுதான் சமயமென்று எண்ணி, பேச ஆரம்பித்தான் ஒருவன், " மன்னிச்சுடுங்க. நீங்க கண்டிப்பா உத்தரவு ஒண்ணும் கொடுக்கலேன்னு சும்மாயிருந்துட்டோம். இனிமேல் இது மாதிரி நடக்காதுங்க. இன்னிக்கு இரட்டிப்பு மரியாதை பண்ணிப்பிடறோம். உத்தரவு இடுங்க " என்றான்.

"ஆமாம் கிளிச்சுடு வீங்க. போலீஸ் புலிகளோல்லியோ! சரி, இப்பவே போய் பள்ளிக்கூடத்து வாசலிலே நில்லுங்க. நான் வீட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு வந்துடறேன் " என்று அவர்களை அனுப்பிவிட்டுத் தன் சைகிளில் ஏறிக் கொண்டு கிளம்பினார் இன்ஸ்பெக்டர்.

* * * *

'ஆகஸ்டு 9-ந் தேதி தலைவர்கள் அநியாயமாகக் கைதி செய்யப்பட்டார்கள்' என்ற செய்தி தேசம் முழுவதும் பரவி எல்லோர் மனதிலும் ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கியது. அடக்குமுறை எரிகிற தீயில் எண்ணெய் விட்டதுபோல் அவைகளை வளர்த்தது. மகத்தான இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறைக்குச் செல்ல அனேகர் தயாராயினர். பலர் தங்கள் உயிரைக் கொடுக்கவும் முன் வந்தனர். ஒரு சிலர் மனதில்உண்டான வெறி அவர்களை பயங்கரச் செயல்களில் இறங்கச் செய்தன. இப்படி தேசத்தில் குழப்பமும் கொந்தளிப்புமாக இருந்தது.

மருதூர்ப் பள்ளிக்கூட மாணவர்கள் தங்களால் இயன்ற முறையில் தங்கள் அதிருப்தியை எடுத்துக் காண்பித்தனர். அவர்களுக்குத் தலைவராக உள்ளூர் தேசியவாதி ஒருவர் வந்து சேர்ந்தார். முதல்நாள், அதாவது 11-ஆம் தேதி, எல்லோரும் 'ஸ்டிரைக்' செய்துவிட்டு 'வந்தே மாதரம், காந்திக்கு ஜே, வெள்ளையனே வெளியேறு' முதலிய கோஷங்களுடன் ஊர்வலமாகச் சென்றனர். முதலில் நூறு பேரடங்கியதாக இருந்த அவ்வூர்வலத்தில் ஆயிரக்கணக்கில் ஜனங்கள் சேர்ந்துவிட்டனர். பிறகு ஆற்று மணலில் நடந்த கூட்டத்தில் சுமார் பத்தாயிரம் பேர் இருந்தனர். அத்தேசியவாதி அவர்களுக்குத் தேசத்தின் நிலைமையை எடுத்துச் சொல்லி அவர்களுடைய கடமையைப் போதித்தார். பிறகு, தான் இன்னும் சில மணி நேரத்திற்குள் கைதி செய்யப்படலாம் என்றும் மாணவர்கள் திடமான நெஞ்சுடன் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்றும் போலீஸ்காரர்களுக்குப் பயப்படக்கூடாது என்றும் சொன்னார். பொன்னையாப் பிள்ளை அன்று ஊரில் இல்லை. போலீஸ்க்காரர்களும் கூட்டத்தில் தலையிடாததால் குறிப்பிடத் தக்க சம்பவம் எதுவும் நிகழவில்லை. பொன்னைய்யாப் பிள்ளை அன்று மாலை திரும்பி வந்ததும் நடந்ததைக் கேட்டதினால் அவர் அடைந்த கோபத்தைத் தான் அறிந்தோம்.

மறுநாள் ஊரெங்கும் கலகலப்பாக இருந்தது. இந்தியாவின் மற்றப் பாகங்களில் நடந்த அமர்க்களத்தை யெல்லாம் பற்றி எல்லோரும் கூடிக் கூடிப் பேசினர். ஏழெட்டுப் போலீஸ்காரர்கள் பள்ளிக்கூடத்து வாசலில் நிற்பதைக் கண்டு மாணவர் பயப்படவில்லை. பொன்னையாப் பிள்ளை வரத் தாமதமானதால் போலீஸ்காரர்கள் செய்வதறியாது நின்றனர். நிமிஷத்திற்கு நிமிஷம் கூட்டம் பெருகிக் கோஷங்களும் எழ ஆரம்பித்தன. அந்தச் சமயத்தில் தான் சப் இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் சில உற்சாகிகள் 'வந்தே மாதரம்' என்று கோஷித்தனர். மறுபடியும் கோஷங்கள் எழுந்தன. எல்லோர் மனதிலும் தேச பக்தியையும் சுதந்திர வெறியையும் மூட்டிவிட்ட அந்த சுலோகங்கள் பொன்னையா பிள்ளையின் மனதில் காரணமற்ற ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கின.

உடனே அவர் தன் ஊதலை எடுத்து ஊதி 'எல்லோரும் இரண்டு நிமிஷத்திற்குள் கலையவேண்டும். இல்லாவிட்டால் தடியடி நடத்த வேண்டியிருக்கும்' என்று அறிவித்தார். இது முன்னால் இருந்த சிலர் காதில் விழுந்ததாயினும் அவர்கள் 'மாட்டோம், மாட்டோம்' என்று இரைந்து சொல்லுவது கண்டு மற்றவர்களும் 'மாட்டோம்' என்று கத்தினார்கள். பிறகு மறுபடியும் கோஷங்கள் எழுந்தன. ஆனால் அத்துடன் நிற்கவில்லை; எங்கிருந்தோ ஒரு சிறு கல் பறந்து வந்து சப்இன்ஸ்பெக்டரின் காலருகில் விழுந்தது. அவ்வளவுதான்! குண்டாந்தடியுடன் கூடிய அவர் கை தானாகவே இயங்கத் தொடங்கிற்று. அதைக் கண்டு மற்ற குண்டாந்தடிகளும் தங்கள் கடமையைச் செய்ய ஆரம்பித்தன. 'பட் பட் பட்' என்று அடிகளின் சப்தமும் இடையிடையே 'ஐயோ! ஐயோ! என்ற அலறல்களும் கேட்டன. ஒன்றிரண்டு தடவை 'வந்தேமாதரம்' என்னும் கோஷம் கேட்டது. இரண்டு நிமிஷத்திற்குள் கீழே விழுந்தவர்களைத் தவிர பாக்கி யெல்லோரும் ஓடிவிட்டனர். பொன்னையாப் பிள்ளை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தன் ஒட்டு மீசையில் கை வைத்தார்.

அன்று சாயங்கிரம் அவர், களைப்புடன் வீட்டிற்கு வந்தபொழுது அவருடைய தாயார் மௌனமாக ஒரு தந்தியைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

"முத்துவுக்கு இன்றைய கலவரத்தில் பலத்த காயம். அபாயம்—நாகு."

அவருடைய மனைவி நாகுவும் பிள்ளை முத்துவும் அவளுடைய பிறந்த வீடு இருக்கும் புங்கனூருக்குப் போயிருந்தார்கள். முத்து அங்கேயே படித்துக் கொண்டிருந்தான்.

பொன்னையாப் பிள்ளை அத்தந்தியைத் திரும்பத் திரும்ப வாசித்தார். ஆனால் அவர் மனதில் உண்டான குழப்பம் காரணமாக அவருக்குப் பொருள் விளங்கவில்லை. கடைசியில் மிகப் பிரயாசையுடன் மற்றொரு தடவை படித்தார். அவர் கை, கால்கள் திடீரென்று சுவாதீனமற்றுப் போயின. தந்தி தானே கைவிலிருந்து நழுவிக் கீழே விழுந்ததையும் அறியமுடியாமல் இடிந்து உட்கார்ந்துவிட்டார். அன்று இரவு புங்கனூர் செல்லும் ரயில் அவருடைய தேகத்தைத் தாங்கிச் சென்றது. மனது மட்டும் முன்னதாகவே புங்கனூரை அடைந்துவிட்டது.

ரயிலில் கழிந்த அந்தப் பன்னிரெண்டு மணி நேரத்திலும் எத்தனைவித எண்ணங்கள் அவரை உலுக்கின? முத்து பிறந்தபொழுது அவர் சர்க்கரையையும் கற்கண்டையும் வாரி வாரி எல்லோருக்கும் கொடுத்தது நேற்று நடந்தது போல் தோன்றிற்று. அவனைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும்போது ஊரார் எல்லோருக்கும் சாப்பாடு போட்டது பொய்யாகப் போகிறதா? அவனுடைய தாத்தா வந்தபொழுது அவருடன் புங்கனூர் போவேன் என்று ரகளை செய்தது பொய்யாகப் போகிறதா? ஐயோ, முத்து! நீ பிறந்ததுகூடப் பொய்யாகப் போகிறதா?

"சீ, இந்தப் பாழும் மனசுதான் என்னென்ன நினைக்கிறது! முத்து பிழைச்சுடுவான். கடவுள் காப்பாத்தி விடுவார்" என்று நடு நடுவே தேற்றிக் கொள்ளுவார். ஆனாலும் அப்பாழும் மனசு மறுபடியும் கற்பனையில் இறங்கி விடும். முத்து இறந்து கிடப்பது போலும் தன் மனைவி கதறியழுவது போலும் அவருக்குத் தோன்றும். முத்துவின் தலை பிளந்து அதிலிருந்து ரத்தம் பெருகி ஓடும் காட்சியை மனத்திரையில் சித்தரித்துப் பார்த்ததும் அவர் தேகம் தள்ளிற்று. தலை ஜன்னல் கட்டையில் இடிப்பட்ட பிறகுதான் அவருக்கு ரயிலில் இருப்பது ஞாபகம் வந்தது.

புங்கனூர் ஸ்டேஷனில் இறங்கியதும் சுற்றுமுற்றும் பார்த்தார். ஒருவரும் தன்னைத் தேடி வரவில்லை என்று அறிந்ததும் இயந்திரம்போல நடந்து மாமனார் வீட்டுக்கு வந்தார். வீடு களையிழந்து இருப்பதுபோல் அவர் மனது நினைத்ததும் ஹிருதயம் டக் டக் என்று அடித்துக்கொண்டது. ஒரே தாவலில் உள்ளே செல்லவேண்டும் என்று எண்ணினாலும் மெதுவாகக் கைப்பிடியையும் சுவரையும் பிடித்துக்கொண்டு தான் உள்ளே செல்ல முடிந்தது. அங்கே அவருடைய நெஞ்சைப் பிளக்கும் காட்சி காத்திருந்தது.

அவரைக் கண்டதும் அவர் மனைவி 'கோ' வென்று கதறினாள். ஆனால் அவர் காதில் அது விழவில்லை. அவர் பார்வை அங்கே கிடந்த முத்துவின்மேல் தான் பாய்ந்தது. தலை முழுவதும் பெரிய கட்டு; கைஎலும்பு முறிந்ததற்கு அறிகுறியாக வலது கையை மடக்கிக் கழுத்துடன் இணைத்திருந்தது. முகத்தில் ரத்தம் வழிந்ததற்கு அடையாளமாகத் திட்டுத்திட்டாக ரத்தக் கறை; இவைகளெல்லாவற்றையும் தான் அவர் கண்கள் கவனித்தன.

மிகுந்த பிரயாசையுடன் 'முத்து' என்று அழைத்துக்கொண்டு படுக்கையை நெருங்கினார். முத்துவுக்கு இவ்வுலக நினைவிருந்தால் தானே அவன் கண்ணைத் திறந்து பார்க்க? ஆனால் வாய் மட்டும் அசைந்தது. "வந்தே மாதரம், காந்திக்கு ஜே" என்று உதடுகள் முணுமுணுத்தன. கடைசியில் ஒரு முனகல். அவ்வளவுதான். முத்துவின் உயிர் ஒட்டைச்சடலத்திடமிருந்து விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டது. இந்தப் பொய்யுலகத்தின் சுகதுக்கங்களுக்கு மேலான நிலையை அடைந்து விட்டான்.

நாகு கதறியழுதாள். "ஐயோ! பள்ளிக்கூடத்து வாசலில் நின்னுக்கிட்டிருந்த பிள்ளையை எந்தப் பாவியோ அடிச்சுக் கொன்னுட்டானே. கூட்டத்தில் நின்று ஏதோ 'ஜே'ன்னு சொன்னதுக்காக மண்டையை உடைச்சுப் போட்டுட்டானே! அவன் பிள்ளை குட்டி நன்றாய் இருக்குமா?"

பொன்னையாப் பிள்ளை தன் ஹிருதயத்தை யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்ற உணர்ச்சியை அனுபவித்தார். அவர் உடலில் கனமேயில்லாதது போன்ற பிரமை உண்டாயிற்று. எதிரில் இருப்பது ஒன்றும் தெரியாமல் ஒரே அந்தகாரமாக மாறியது. தான் நூறு மைல் வேகத்தில் சுற்றுவது போலும், உயரமான மலையுச்சியிலிருந்து கால் வழுக்கித் தலைகீழாக விழுவதுபோலும் தோன்றிற்று. தன்னையும் அதுமாதிரி யாரோ ஒரு தாய் சபித்திருக்கவேண்டும். ஐயோ இவ்வளவு சீக்கிரமா பலிக்க வேண்டும்?

* * * *

பலவிதமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். மற்ற சடங்குகள் எல்லாம் முடிந்தபிறகு அவர் மனது திடப்பட்டுவிட்டது. அடிக்கடி "அப்படித்தான் செய்யவேண்டும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். தான் புதிய மனிதனாக மாறிவிட்டது போலவும் தன் மகன் தேசத்தை விடுதலை செய்யவேண்டிய பணியைத் தனக்குக் கொடுத்துவிட்டுப் போயிருப்பதாகவும் நினைக்க ஆரம்பித்தார்.

கடைசியில் ஒருநாள் திடீரென்று தன் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு எங்கேயோ மறைந்துவிட்டார்.

ஜெகன் மோகினி

எல். ராஜலக்ஷ்மி

கூவென்றாதிக் கொண்டு புகைவண்டி தென்காசி, ஸ்டேஷனில் நின்றது. சிவ ஞானமும் திருமலையும் வண்டியை விட்டி றங்கியதும் ஒரு மாட்டு வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு, "வண்டியைத் திருக்குற்றாலத்துக்கு ஓட்டு அப்பா" என்று சொன்னார்கள். வண்டிக்காரன் பளீர் பளீர் எனறு ஈாலு வாங்கவே மாடு வண்டியை இழுத்துக்கொண்டு வேகமாக ஓட வாரம்பித்தது. சிவஞானம் திருமலையை நோக்கி "திருமலே! குற்றாலம் நீர் வீழ்ச்சியில் ஸ்நானம் செய்து விட்டு இன்றிரவு புறப்பட்டு மதுரை போயாக வேண்டும். உன் உத்தேசமென்ன?" என்று கேட்டான் "நானும் அப்படித்தான் நினைத்தேன். ஒரு இடத்திலேயே பல நாட்கள் தங்க முடியுமா? எல்லா இடங்களையும் பார்த்து விட்டு ஊர் போய்ச் சேருவதற்குள் லீவும் முடிந்துவிடும்" என்று பதிலளித்தான் திருமலை.

மறுநாள் பௌர்ணமியானதால் விடியற் காலம் நான்கு மணிக்கும் நிலா பட்டப் பகல்போல் வெளிச்சத்தை அள்ளி யிறைத்துக் கொண்டிருந்தது. "கொஞ்ச தூரத்திற்கப்பால் ஒரு அழகிய பங்களா இருந்ததே! அதில் இப்போது யார் வசிக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?" என்று திடீரென்று வண்டிக்காரனைக் கேட்டான் திருமலை." அதிலே ஒத்தரும் குடியில்லிங்க. ராத்திரி வேளையிலே பேயுங்க கடமாடுதுங்களாம். அதுக்காவ பயந்துகினு யாரும் அந்தப் பங்களாப் பக்கமே வருவதில்லிங்க" என்றான் வண்டிக்காரன். இதைக் கேட்டதும், திருமலையின்முகம் வாட்டமடைந்தது. "என்ன பிதற்றல்? பேயாவது மண்ணாங்கட்டியாவது! எல்லாம் வெறும் மனப்பிரமையே யன்றி வேறு ஒன்றுமில்லை. அவன் சொல்லுகிறா னென்றால் அதை நீயும் நம்புகிறாயா?" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் சிவஞானம்.

"இல்லீங்க சாமி, அங்கு பேய் இருப்பது நெசந்தாங்க. இன்னொரு வேடிக்கை கேட்டீங்களா? ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் இரண்டு பேயுங்க அந்தப் பங்களாவுக்குப் பக்கத்திலிருக்கும் குளத்தங்கரையில் பாடுதுங்க. பாட்டு ரொம்ப அருமையாய் இருக்குது. நான் கூட இரண்டு தடவை கேட்டேனுங்க" என்றான் வண்டிக்காரன் மறுபடியும்.

"போடா பைத்தியக்காரா! பேய் எங்கேயாவது பாடுமா? இதை நான் நம்பவேமாட்டேன்" என்று சிவஞானம் சொன்னான். ரஸ்தாவுக்கருகில் ஒரு பாழடைந்த பங்களா சிவஞானத்தின் திருஷ்டிக்குப் புலப்பட்டது. "ஐயோ! இதுதான் அந்தப் பேய்கள் உலாவும் பங்களா" என்று சொல்லிவிட்டுச் சிவஞானத்தின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான் திருமலை. பயத்தால் அவனது முகம் சவம்போல் வெளுத்திருந்தது. "நண்பா! இதென்ன அசட்டுத்தனம்? நீயும் பேய்கள் உண்டு என்பதை நம்புகிறாயா" என்று ஆச்சரியத்துடன் திருமலையைக் கேட்டான் சிவஞானம்

"சிவஞானம்! உனக்கு விஷயம் தெரியாது. தெரிந்திருந்தால் இப்படிப் பேசவே மாட்டாய். இந்தப் பங்களாவில் பேய்கள் உலாவுவது வாஸ்தவந்தான். ஆனால் அந்தப் பேய்கள் மற்றப் பேய்களைப்போல் பயமுறுத்தும் பேய்களல்ல. தெய்வீகத் தன்மை வாய்ந்த பேய்கள். சங்கீத ஞானமுள்ள பேய்கள். அந்தப் பேய்களைப் போல் பாடக்கூடியவர்கள் இந்த உலகில் ஒருவருமே இருக்கமாட்

டார்கள். அந்தப் பேய்களின் சங்கீதத்தை அவை உயிருடன் இருக்கும்போது— ஆம் நம்மைப்போன்ற மனித உருவத்தி லிருக்கும்போது காதாரக் கேட்டிருக் கிறேன். ஆகா! ஜெகன்னுதன் குழலை யெடுத்து வாசித்தானுனல் பட்ட மரமும் பால் வடிக்கும். அடாடா! அவன் மனைவி பாடினுல் நாள் முழுவதும் கேட் டுக் கொண்டிருக்கலாமே! பதினைந்து வருடங்களுக்கு முன்பு அந்தப் பங்களா வில் நடந்த சம்பவம் இன்னும் என் அகக் கண்ணை விட்டு அகலவேயில்லை" என்றான் திருமலை. அவன் கண்களி லிருந்து கண்ணீர் பெருகியது. இதைக் கேட்டதும் சிவஞானம் மிகுந்த வியப்பும் பிரமிப்புமடைந்தான். "திருமலை! விஷயத்தைச் சற்று விபரமாகச் சொல் லேன்" என்று கேட்டான்.

"அது ஒரு பெரிய கதை" என்று பின் வருமாறு கூறத் தொடங்கினுன் திருமலை :—

"நானும் ஜெகன்னுதனும் பாலிய சிநேகிதர்கள் முதல் வகுப்பிலிருந்து பி. ஏ. வகுப்புவரையில் ஒன்றாக வாசித் தோம் என்றால் பார்த்துக்கொள்ளேன். ஜெகன்னுதன் ஒரு கட்டழகன். ரொம்பப் புத்திசாலி. சங்கீத மென்றால் அவனுக் குப் பிராணன். புல்லாங்குழல் வாசிப் பதில் அவனுக்கு நிகர் ஒருவருமில்லை யென்றே சொல்லவேண்டும். அபூர்வ மான ராகங்களை வெகு அருமையாக வாசிப்பான். ஒழிந்த வேளையில் அவன் குழலிசையை யனுபவித்து ஆனந்த முறு வேன், எல்லா ராகங்களையும் விட ஜெகன் மோகினி ராகத்தில்தான் அவ னுக்குப் பிரிய மதிகம். வித்வான்களெல் லாம் பிரமிக்கும்படி அவ்வளவு அழகாக வாசிப்பான் அவன். கலாசாலை மாணவர் களால் நடத்தப்படும் ஒவ்வொரு கொண் டாட்டமும் அவனது புல்லாங்குழல் கச்சேரியில்லாமல் நடைபெறாது.

பி. ஏ. வகுப்பில் தேறியதும் அவனுக் குக் கல்யாணமாயிற்று. நானும் அவன் விவாகத்திற்குச் சென்றிருந்தேன். அவன் மனைவி மோகினி—தெய்வ லோகத்துக் கன்னிகையைப் போல் ஒப் பற்ற அழகுடையவளாக இருந்தாள். இருவரும் ரதியும் மதனும் போல் மண வறையில் உட்கார்ந்திருந்தது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. நலங் கின் போது மணப் பெண் பாடினுள். ஆகா! அந்தக் குரலின் இனிமையை என்னவென்று சொல்லுவேன்? குழலி சையை விட இனிமையாக இருந்தது அவளது குரலிசை. ஜெகன்னுதன் ஆனந் தப் பரவசமடைந்தவனுய் காதலியின் அதிமதுரமான கானம் ருதத்தைப் பருகிக் கொண்டிருந்தான். "நீ பாக்கிய சாலியடா!" என்று நானவனைக் கொண் டாடினேன்.

கல்யாணத்திற்குப் பிறகு இளங் காத லர்களிருவரும் சந்தோஷமாக இல் வாழ்க்கை நடத்தவாரம்பித்தார்கள். இருவரும் சதா பாடிய வண்ணமாகவே இருப்பார்கள். மோகினி பாடுவாள். அதற்குத் தகுந்தாற்போல் ஜெகன் னுதன் குழல் வாசிப்பான். இப்படியாகச் சில மாதங்கள் கழிந்தன. எனக்கு டெல்லியில் ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்தது. என்னுருயிர் நண்பனை விட்டுப் பிரிய எனக்குக் கொஞ்சங்கூட மனம் வரவில்லை. என்ன செய்வது? பிரியாவிடை பெற்றுச் சென்றேன். கடிதப் போக்கு வரத்தால் இருவரும் சற்று மனவமைதியடைந்து வந்தோம்.

இங்கிலையில் திடீரென்று ஜெகன்னுதன் எனக்குக் கடிதமெழுதுவதை நிறுத்தி விட்டான். நான் பல கடிதங்கள் போட்டுப் பதில் வராததாலும் நானும் கடிதம் எழுதுவதை நிறுத்தி விட்டேன், ஆனல் அவனது நினைவு மட்டும் எனது மனதை விட்டகலவில்லை. எனக்குக் கல்யாணமாகி இரண்டு குழந் தைகள் கூடப் பிறந்து விட்டன. இரண்டு மாதங்கள் ரஜாப் பெற்றுக் கொண்டு மனைவி குழந்தைகளுடன் சொந்த ஊருக்குக் கிளம்பினேன். மனைவியைக் குழந்தைகளுடன் அவள் பிறந்தகத்தில் விட்டு விட்டு நான் மட்டும் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந் தேன். ஜெகன்னுதனின் இருப்பிடம் மட்டும் எனக்குத் தெரியவில்லை,

பலரை விசாரித்ததில் அவனுக்குச் "சித்தப் பிரமை பிடித்துவிட்டதென் றும் ஏதோ ஒரு பாழடைந்த பங்களாவில் ஏகாந்தமாகக் காலங் கழித்து வருவதாகவும் தெரிய வந்தது. எப்படியாவது அவனைச் சந்தித்தே தீரு வது என்று சங்கற்பம் செய்து கொண்டு அந்தப் பாழடைந்த பங்களாவையடைந் தேன். மனித சஞ்சாரமற்ற அந்த இடத்தில் ஜெகன்னுதன் தன்னந்தனியே பித்துப்பிடித்தவன் போல் உட்கார்ந் திருந்தான். கறுத்து, தாடி மீசையுடன் எலும்பும் தோலுமாக இருந்தான். "நண்பா? இதென்ன கோலம்? ஏனிப்படி உரு மாறிவிட்டாய்? உன் மனைவி எங்கே? எதற்காக இந்தக் காட் டில் வசிக்கிறுய்?" என்று படபடப்புடன் கேட்டேன். என்னைக்கண்டதுமே ஜெகன்னுதன் கண்ணைப் பொத்திக் கொண்டு விம்மி விம்மி யழவாரம்பித் தான்.

"நண்பா? ஏனிப்படி வருந்துகிறுய்? மனதிலுள்ளதை வாய்விட்டுக் கூறினலா வது மனம் சற்றுச் சமாதானமடையும். உன் குழல் எங்கே! அருமை மோகினி எங்கே?" என்று கேட்டேன்.

"நண்பா! என்னைப்போன்ற அதிர்ஷ்டஹீனன் இந்த உலகத்திலேயே ஒருவரு மிருக்கமாட்டார்கள். என் கண்மணி, மோகினி போய்விட்டாள். என் வாழ்க்கையின் நாதம் மறைந்து விட்டது. சிறகொடிந்த பட்சிபோல் என்னைத் தன்னந்தனியே விட்டுவிட்டு அவள் பறந்து போய்விட்டாள். என் சங்கீதக் களஞ்சியம் போனபின்பு எனக்கு வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டு விட்டது. என் கண்மணி போனதி லிருந்து இது வரையில் நான் குழலைத் தொடவில்லை—" என்றுன் அவன் வற்றிண்ட உள்ளத்துடன்.

அவன் பதில் என்னைத் தூக்கி வாரிப் போடச்செய்தது. என்னையறியாமல் என் கண்களில் கண்ணீர் ததும்பியது. "அடடா! மோகினி இறந்தா போய் விட்டாள்? எப்போது இறந்தாள்; அதனுல்தான் நீ எனக்குக் கடிதமே போடவில்லையா? ஜெகன்னுதா! வருந் தாதே. எல்லாம் ஈசன் செயல். மன தைத் திடப்படுத்திக் கொண்டு சகல விஷயங்களையும் விபரமாகச் சொல்லு" என்று கேட்டேன். அவன் பின் வரு மாறு கூறினன்:

எனக்குக் கல்யாணமான சில நாட்க ளில் என் பெற்றேர் இறந்துவிட்டனர். என்தந்தை ஏராளமான பொருளைத்தேடி வைத்துவிட்டுப் போயிருந்தால் நான் ஒரு உத்தியோகத்துக்கும் போகாமல் என் மனைவியுடன் இந்தப் பங்களாவில் ஏகாந்தமாக வசித்துவந்தேன். சதா சர்வகாலமும் சங்கீதாப்யாசம் செய்வதி லேயே நாங்கள் பொழுதைக் கழித்து வந்தோம். சமையற்காரனும் தோட்டக் காரனுமே எங்களுக்குத் துணை. இரவு வேளைகளில் நாஙகளிருவரும பங்களா விற் கருகிலிருக்கும் குளக்கரையில் உட் கார்ந்து கொண்டு ஆனந்தமாகக் காலங் கழிப்பது வழக்கம்.

அன்று பௌர்ணமி சந்திரன் பிரகா சித்துக் கொண்டிருந்தான். ஸ்படிகம் போல் தெளிந்திருந்த குளத்துத் தண் ணீரில் சந்திரனின் பிரதிபிம்பம் வட்ட வடிவமாகத் தெரிந்தது. மோகினி தனது அழகிய கால்களால் தண்ணீரை அளைந்து கொண்டே சிதறிக் கிடக்கும் வைரக் கற்கள் போல் சலனமடைந்து கொண்டிருக்கும் தண்ணீரில் தோன் றும் மதியின் அழகைக்கண்டு களித்துக் கொண்டிருந்தாள். அவளது வாய் மெது வாக ஜெகன் மோகினி ராகத்தை முணு முணுத்துக் கொண்டிருந்தது. என் குழலும் அதே ராகத்தை இசைத்துக் கொண்டிருந்தது. சங்கீதத்திலேயே மெய்மறந்திருந்த நான் "ஐயோ" என்று மோகினி கத்தியதைக் கேட்ட துமே திடுக்கிட்டுத் திரும்பினேன். என் கண்மணி குளத்தில் விழுந்துவிட் டாள் என்றதையறிந்ததும் குழலைக் கரையில் எறிந்துவிட்டுத் தண்ணீரில் குதித்தேன். குளம் ஆழமாக இருந்த தாலும் எனக்கு நன்ருக நீந்தத் தெரி யாததாலும் அவளைக் காப்பாற்றிக் கரை சேர்க்கச் சற்றுத் தாமதமாகி விட்டது.

அதிகம் கூறுவானேன்? கரைசேர்த்ததும் கவனித்ததில் அவள் இறந்து விட்டதாக அறிந்தேன். நண்பா! அப்போது என் மனம் பட்ட பாட்டை விவரிக்க என்னாலியலாது. அழுதேன். முட்டிக் கொண்டேன். என்ன பயன்? என் கண்மணி போய்விட்டாள்—"

"நண்பா! உன் சரிதை பரிதாபகரமானதுதா னென்றாலும் நீ இந்த இள வயதில் ஏகாந்தமாகக் காலங் கழிப்பது அழகல்ல. வேறொரு பெண்ணை மணந்து கொண்டு சுகமாயிரு. சும்மா அவளையே நினைத்து நினைத்து ஏங்காதே. நீ குழல் வாசித்துக்கேட்டு எத்தனை வருடங்களாயின? எங்கே, எனக்காகக் கொஞ்சம் வாசி கேட்போம்" என்று அவன் மனதை வேறு விஷயத்தில் திருப்ப முயன்றேன் "திருமலை! அவள் இறந்ததிலிருந்து நான் குழல் வாசிப்பதையே விட்டுவிட்டேன்" என்றான் அவன். நான் ரொம்ப வற்புறுத்தியதின் பேரில் குழல் வாசிக்க வாரம்பித்தான். இருவரும் குளக்கரையடைந்தோம். ஜெகன்னாதன் தூசிபடிந்திருந்த குழலைத் துடைத்துவிட்டு வாசிக்க வாரம்பித்தான். பல வருஷங்களாக வாசிக்காமலிருந்தாலும் அவனது வாசிப்பு கொஞ்சங் கூடக் குறையவில்லை. ஆனால் அவனது சங்கீதத்தில் முன்பு இருந்த விறுவிறுப்பு இல்லை. சோகம் குடிகொண்டிருந்தது. நிலா பட்டப் பகல்போல் காய்ந்து கொண்டிருந்தது. நிச்சப்தமான அந்த இரவில் குழலிசை காற்றில் மிதந்து வந்து என் காதுகளில் புகுந்து என்னை இன்பப் பரவசமாக்கி விட்டது. ஜெகன்னாதன் தன்னையே மறந்து ஜெகன் மோகினி ராகத்தை வாசிக்க வாரம்பித்துவிட்டான். "இப்போதாவது உங்களுக்குத் தயவு பிறந்ததே!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். நாலு பக்கமும் சுற்றிப் பார்த்தேன். ஒருவரையும் காணேம். "கண்ணே! மோகினி! வந்து விட்டாயா?" என்று ஆவேசம் வந்தவனைப்போல் என்னைக் கட்டிக் கொண்டான் ஜெகன்னாதன். பயத்தால் என்னுடல் வெடவெட வென்று நடுங்கியது. "ஏன் வாசிப்பதை நிறுத்திவிட்டீர்கள்?" என்று கனிரென்ற பெண் குரல் எனக்குப் பின்னாலிருந்து கேட்டது. திரும்பிப் பார்த்தேன். கடவுளே! ஒரு பிராணியையும் காணேம்! எனக்குப் பயம் வகையாகப் பிடித்துவிட்டது. மெள்ள நகர்ந்து உட்கார்ந்து கொண்டேன். ஜெகன்னாதன் புன்னகையுடன் ஜெகன்மோகினி ராகத்தைத் தொடர்ந்து வாசிக்கலானான். நண்பா! என்ன ஆச்சரியத்தைச் சொல்வேன்? ஒரு பெண் குரல் குழலுடன் சேர்ந்து ஜெகன் மோகினி ராகத்தை இசைத்துக் கொண்டிருந்ததைக் காதாறக் கேட்டேன். மோகினியின் குரல்போலவே இருந்தது அக்குரலும்! அதற்குமேல் அங்கிருக்க எனக்குத் தைரியமில்லை. மெள்ள எழுந்து செல்ல முயன்றேன். அப்போது திடீரென்று "ஐயோ! குளத்தில் விழுந்தேனே!" என்று ஒரு பெண்ணின் தீனமான குரல் எழுந்தது. ஆனால் ஆளைக்காணேம். ஜெகன்னாதன் திடுக்கிட்டான். "மோகினி! என்னைவிட்டுப் போகாதே" என்று கத்திக்கொண்டே ஜெகன்னாதன் தொப்பென்று குளத்தில் குதித்தான். நான் பயத்தால் மூர்ச்சையடைந்தேன். விழித்துக் கொண்டு பார்த்தபோது ஜெகன்னாதனின் உயிரற்ற சடலம் குளத்தில் மிதப்பதைக் கண்டேன்—"

இதுவரையில் பேசாமலிருந்த சிவஞானம் கலகலவென்று நகைத்தான். "திருமலை! உன் சிநேகிதன் மனப்பிராந்தியாலேயே மரணமடைந்திருக்கிறான். பாவம்! பேய் எங்கேயாவது பாடுமா? நீயும் ஏமாந்து போயிருக்கிறாய்! அனாவசியமாக நீ பயந்ததால் உன் சிநேகிதனைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது" என்றான்.

"சிவஞானம்! நீ நேரில் பார்த்தாலொழிய நம்பமாட்டாய். பௌர்ணமியன்று இரவில் குழலிசையும் குரலிசையும் இனிமையான சங்கீத விருந்தையளிப்பதாக எல்லோரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அந்த இளந் தம்பதிகளின் ஆவிகள் இரவில் பாடுவது வாஸ்

தவமே" என்றான் திருமலை. அவன் கூறியதற்குப் பதிலொன்றும் பகராமல் மௌனமாக இருந்தான் சிவஞானம். திருமலை கூறிய அதிசயமான சம்பவத்தைப் பற்றிய உண்மையையறிய அவனுள்ளம் தூண்டிற்று. குற்றாலத்தில்ஸ்நானம்செய்தபின் ஒரு சிற்றுண்டிச் சாலையில் போஜனமுட் கொண்டுவிட்டு இருவரும் அன்றிரவே அவ்விடத்தை விட்டகன்றனர். பாழடைந்த பங்களா நெருங்கியதும் சிவஞானம் வண்டியை நிறுத்தச் சொல்லிவிட்டுத் திருமலையுடன் கீழே இறங்கினான்.

"சிவஞானம்! அந்தக் குளத்தினருகில் போகாதே! எனக்குப் பயமாக இருக்கிறது!" என்றான் திருமலை.

"போடா மடையா! நானிருக்கிறேன். பயப்படாமல் வா. உன்னைப் பேய்பிடித்துக் கொண்டால் அதை விரட்ட எனக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டுத் திருமலையின் கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான் சிவஞானம்.

நள்ளிரவு. பௌர்ணமியானதால் நிலா மட்டும் பால்போல் காய்ந்துகொண்டிருந்தது. சிவஞானமும் திருமலையும் குளக்கரையில் அமர்ந்தனர். இருவரும் பத்து நிமிஷங்கள் ஒருவரோடொருவர் பேசாமல் மௌனமாக இருந்தனர். என்ன விந்தை! திடீரென்று புல்லாங்குழலின் த்வனியும் மதுரமான குரலோசையும் கணீரென்று கலந்தொலித்தது. சிவஞானம் ஆச்சர்யத்துடன் திருமலையை நோக்கினான். இனிமையான குரலில் யாரோ ஒரு பெண் ஜெகன் மோகினி ராகம் பாடுவதும் அதற்குத் தகுந்தாற் போல் யாரோ குழல் வாசிப்பதும் வெகு சமீபத்தில் தெளிவாக சிவஞானத்தின் செவிகளில் ஊடுருவிப் பாய்ந்தது. சப்தம் மட்டும் வந்ததேயன்றி ஒரு உருவமும் அவன் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. சிவஞானம் சற்றுநேரம் இசையில் மயங்கியவனைப் ஸ்தம்பித்துவிட்டான். ஐந்து நிமிஷங்கள் கழிந்திருக்கும்—திடீரென்று "ஐயோ! நான் குளத்தில் விழுந்து விட்டேனே!" என்ற ஒரு பெண் குரலும் "மோகினி! என்னை விட்டுவிட்டுப் போகாதே!" என்ற ஆண் குரலும் எழுந்தது. பாட்டு சடக்கென்று நின்றுவிட்டது. ஆனால் தொபீர் என்று யாரோ குளத்தில் குதிப்பதுபோன்ற சப்தம்! தண்ணீர் சலனமடைந்தது. பிறகு அவ்விடத்தில் நிச்சப்தம் குடிகொண்டது.

"இப்போதாவது என்னை நம்புகிறாயா?" என்று கேட்டான் திருமலை.

"திருமலை! நீ கூறியது வாஸ்தவந்தான் இம்மாதிரியான ஒரு அதிசய நிகழ்ச்சியை நான் எங்குமே கண்டதில்லை. உன் நண்பனும் அவன் வனிதையும் பேய்களல்ல. தேவர்களாக இருக்க வேண்டும். அவர்களிடமுள்ள ஒருவிதத் தெய்வீகச் சக்தியே இந்தப்புனிதமான இடத்தில் இன்னிசையாகத் த்வனிக்கிறது" என்றான் சிவஞானம்.

விவசாய அனுபவத்தை ஒட்டி எழுதப்பெறும் கட்டுரைகள் தேவை. ஏதாவதொரு கிராமத்தில் ஒரு முக்கியமான கைத்தொழில் நடந்து வந்து அது இப்பொழுது நல்ல ஸ்திதியிலோ, க்ஷீணமான நிலையிலோ இருந்தால் அத்தகைய விவரம் குறித்த கட்டுரைகள் அங்கீகரிக்கப்படும். பொதுமக்களின் குறைகளையும், அதிகாரவர்க்கம் செய்யத் தவறிய கடமைகளையும் குறித்துச் சுருக்கமாக எழுதியனுப்பினால் நமது, "தபால்பெட்டி" என்கிற தலைப்பில் பிரசுரமாகும்.

நிழல் விளையாட்டு

'யமுனாபுத்திரன்'

"டே டோய், அதோ டோய், பிடி. பிடிடா எலே! இங்கு வா, வா, வா, ஹாய் ஊய்" என்று கூச்சல். சிறுவர்கள் சிறுமிகள், எல்லாம் எட்டு வயதை தாண்டாத வாண்டுகள். பறந்து போகும் பஞ்சைத் தொடர்ந்து இந்த அமக்களம்.

"அடி, கோமு! வெயிலிலே என்ன வேலை? காலை கீழே வைக்கமுடியல்லே நெருப்பாக கொதிக்கிறது. நிலா என்று ஞாபகம் இந்த ஊர் குழந்தைகளுக்கு. இங்கு வாடி" என்று ஒரு குரல் அதட்டிக்கொண்டே வந்தாள். அந்த அம்மாவுக்கு வயது முப்பதுக்குள் இருக்கும், சதை விழாத உடம்பு. ஆனாலும் கையில் விசிறியுடன் ஓடி வந்தாள்.

"இல்லேம்மா. கோயில் மரத்திலே பஞ்சு பறக்கிறது. அதைப் பார்க்கிறேன் அம்மா" என்றாள் கோமதி பயத்துடன்.

"என்னடி புருஷப் பிள்ளைகளோடு விளையாட்டு? போ உள்ளே" என்று விட்டு மற்றக் குழந்தைகளைப் பார்த்து, "உங்களுக்கெல்லாம விளையாட நேரமில்லையா? போங்க ஆத்துக்கு" என்று விசிறிக் காம்பினால் வழியையும் காட்டினாள்.

நிசப்தம் குடிகொண்டது. குறட்டோரம் நின்றபடி 'பட்டாபி மட்டும் திண்ணையின் பாதுகாப்பில் நின்றபடி அவளுக்கு அழகு காட்டிவிட்டு ஓடினான்.

"பொம்மனாட்டியா லக்ஷணமா இல்லாமே புருஷாளோடு விளையாட்டு, இனிமே விளையாடு சொல்றேன்" என்று கர்ஜித்தாள். தாயும் சேயும் உள்ளே சென்றார்கள்.

ஒரு இதழ் பஞ்சு என் முகத்திற்கு அருகில் பறந்தது. தாவிப் பிடித்தேன். என்ன மிருது. என்ன வேகம். எவ்வளவு சுலபத்தில் பறக்கிறது என்று வாய் முணு முணுத்ததே தவிர எண்ணம் எங்கேயோ?

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு. ஆனால் இதே இடம். தெருக்கோடி வேலியோரம். இதே மரத்துப் பஞ்சு பறந்தது. அன்று அவள் ஓடினாள் சிறுமியாக பாவாடை கட்டிக்கொண்டு. இன்று அவள் குடும்பத்தலைவி. பின்னால் ஓடியது நான்தான். பஞ்சு மேலே பறந்தது.

அவள் எட்டி எட்டித் தாவினாள். முயற்சித்தாள் பஞ்சை பிடிக்க. நான் பிடித்தே விட்டேன் ஒரே தாவில். வெற்றி எனக்கே.

"எனக்குக் கொடு!" என்றாள்.

நான் மாட்டேன் என்றேன்.

"நான்தானே மொதல்லே பிடிக்க ஓடினேன்."

"நான்தானேபிடித்தேன்; மாட்டேன்."

"மோரக்கட்டையைப் பாரு, கொடுடான்னா"

"மோரக்கட்டைன்னு பேசினா குட்டுவேன். குட்டினேன்னா உழக்கு இரத்தம் வந்துடும்."

"நீ ஆம்பிள்ளைன்னா குட்டுடா பார்க்கலாம்."

"விருந்தாளிகள் வந்திருக்கின்றனர்

தேயிலே பானமருந்தி சம்பாஷிக்க...சம்பாஷணை ரஸமானதாக விருக்கலாம், ஆனல் டீ அவர்களுக்கு திருப்தியளிக்க முடியாது......ஏனெனில் விருந்தளிக்கும் அம்மையார் தேயிலே பானத்தை ஈரமான குளிர்ந்த பாண்டத்தில்தயாரித்தார். நல்ல டீ தயாரிக்க ஈரமில்லாத வெது வெதுப்பான பாண்டமே தேவை."



கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிருர்கள். ஆனல் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிக செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினல் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலே பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில் பதியவைத்து, எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

ஐந்து
சுலபமான விதிகள்.

1. புதியதாக எடுத்ததும் புதிதாகக் கொதித்ததுமான ஜலத்தை உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுவெதுப்பாக்கவும். 3. ஒவ்வொருவருக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலே உபயோகிக்கவும். 4. தேயிலே கஷாயம் உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக்கொள்ளவும்—பாண்டத்தில் வேண்டாம்.

"தேயிலைப் பானம் - இல்லை யோசனைகள்" என்ற இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101 நேதாஜி சுபாஷ் ரோட், தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துப் பெறலாம்.

நன்கு தயாரித்த **டீ** யைப் போன்றது வேறேதுவுமில்லை.



இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

"என்னடி பண்ணுவே" குட்ட கையை ஓங்கினேன்."

பக்கத்தில் கிடந்தது ஒரு அரைக்கல் எடுத்து என் தலையை நோக்கி எறிந்து விட்டு ஓடினாள். நல்ல அடி. ரத்தம் கசியத் தொடங்கியது. அப்படியே சுருண்டு கீழே விழுந்து விட்டேன்.

என்மீது கல்லையும் எறிந்துவிட்டு "ஓவென்று அழ ஆரம்பித்துவிட்டாள்" கொலை பண்ணின மாதிரி.

"என்னடி அது" என்று என் அம்மாவும் அவள் அம்மாவும் ஓடிவந்தார்கள்.

"குட்டி பிட்டான் நான் பேசாமே நின்றிருந்தேன். அந்த பருத்தியை வேணும்னு என் கையிலேர்ந்து பிடுங்கிக் கொண்டான். சொடுடான்னே குட்டி பிட்டான். ஊம் ஊம், ஊம......வலிக்கிறது"

"என்னடா தடியா? அப்படித்தான் குட்டறதோ. பாவம், முழிக்கிறதைப் பாரு, ஆடு திருடின திருடனாட்டமா?" என்று எங்கம்மா முதுகில் இரண்டு வைத்தாள். தலையில் கசிந்த ரத்தம் அவள் கையை நனைத்துவிட்டது.

அவள் அழுகை முற்றுப்புள்ளியிட ஆரம்பித்தது.

பிறகு பதினைந்து நாட்கள் ஆஸ்பத்திரி வாசம். அடிப்பட்ட இடம் சொட்டையாகிவிட்டது.

"இனிமே வெயிலிலே போய் புருஷாளோடு விளையாடக்கூடாது. தெரியுமா?" என்ற அதட்டும் சத்தம் காதில் விழுந்தது.

அட புருஷஜென்மமே! நிழலிலே மட்டும் புருஷாளோடு விளையாடலாம் போலிருக்கிறது. குடும்பமே ஒரு நிழல் விளையாட்டுத்தானே என்று என் தலையில் சொட்டைவிழுந்த இடத்தில் தடவிக் கொண்டேன்.

புத்தக உலகம்

நவபாரதி மும்மணிகள்

சமீபத்தில் வெளிவந்த தமிழ்ப் புத்தகங்களில் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை எழுதிய இரண்டு கட்டுரை நூல்கள் விசேஷமாய்க் குறிப்பிடத் தக்கன. (i) இலக்கியச் சிந்தனைகள் விலை ரூ. 3. (ii) தமிழின் மறுமலர்ச்சி விலை ரூ. 2-8-0 (நவபாரதி பிரசுராலயம் லிமிடெட், திருநெல்வேலி) இவையிரண்டும் ஆசிரியரின் ஆராய்ச்சித் திறமையையும் பெரும் புலமையையும் நன்கு வெளியிடுகின்றன. 'இலக்கியச் சிந்தனைக'ளில் இலக்கியத்தின் அடிப்படைத் தத்துவங்கள் முதலியன விளக்கம் பெறுகின்றன. 'தமிழின் மறுமலர்ச்சி'க்கசடுரைகளில் புதிய இலக்கிய முயற்சிகளை ஆசிரியர் விசேஷ அனுதாபத்துடன் நோக்கி மொழியின் முன்னேற்றத்திற்குரிய பல அரிய கருத்துக்களைத் தெளிவாக வெளியிடுகிறார். இந்த இரண்டு நூல்களையும் தாய்மொழியில் சிரத்தையுள்ள அனைவரும் படித்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மேலே சொன்ன இரண்டு நவபாரதி வெளியீடுகளுடன் 'என் குருநாதர் பாரதியார்' (ஆசிரியர் ரா. கனகலிங்கம் வினியோகம். நவபாரதி பிரசுராலயம் லிமிடெட். விலை ரூ 2) என்ற வெளியீட்டையும் சேர்த்து இம்மூன்றையும் 'நவபாரதி மும்மணிகள்' என்று சொல்லலாம். பாரதியாரைப் பற்றி இதுவரை வெளிவந்திருக்கும் நூல்களில் எல்லாம் இதுவே மிகவும் சிறந்ததென்பது என் அபிப்பிராயம். பாரதியாரின் தேசபக்த கவியுள்ளத்திற்கு இந்நூலையே ஓர் 'அன்புத் திறவுகோல்' என்று சொல்லலாம். இவ் ஆசிரியரின் குருபக்தியால் உருவாகியிருக்கும் இந்நூலைத் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை தமது பதிப்புரையில் கூறுவதுபோல், 'தமிழ் மகன் ஒவ்வொருவனும் படிக்கவேண்டும். இந்நூலில் காணும் செய்திகளை அறியாதவன் பாரதியின் பாடல்களை உணர்ந்தவனாகான்',